SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue:6, Pages:56
January-2023, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜனவரி 2023,
விலை ரூ.20/-



20–11–2022 முதல் 28–11–2022 வரை திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு நடைபெற்ற பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்.
இப்பிரம்மோத்ஸவத்தில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்,
தி.தி.தே.செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர்கள்
திரு.வி. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். (எச்&இ) அவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்














*தோ$_3$ஷைரேதை: குலக்$_4$நாநாம்*
*வர்ணஸங்கரகாரகை: |*
*உத்ஸாத்$_3$யந்தே ஜாதித$_4$ர்மா:*
*குலத$_4$ர்மாச்ச சாச்வதா: ||*

**குலநாசம் செய்பவர்களின் இந்த வர்ணக் கலப்பு ஏற்படுத்துகின்ற குற்றங்களினால், தொன்றுதொட்டு வருகின்ற குலதர்மங்களும் ஜாதி தர்மங்களும் அழிந்து விடுகின்றன.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–43*

*காலாத்மா சர்வபூதாத்மா வேதாத்மா விஸ்வதோ முக:*
*ஜன்ம ம்ருத்யு ஜராவியாதி ஸம்ஸாரபயநாசன: ||*
*பிரஹ்ம ஸ்வரூபம் உதயே மாத்யான்யீஹே து மஹேஸ்வர:*
*அஸ்தகாலே ஸ்வயம் விஷ்ணு த்ரயீமூர்த்தி: திவாகர: ||*
*ஏக சக்ர ரதோயஸ்ய திவ்ய: கனகபூஷித: ஸோயம் பவது ந:*
*ப்ரீத பத்ம ஹஸ்தோ திவாகர: ||*
*பத்ம ஹஸ்த: பத்மஜோதி: பரேசாய நமோ நம:*
*அண்டயோனே மஹா ஸாக்ஷின் ஆதித்யாய நமோ நம: ||*



**சூரியன் கால வடிவன். எல்லாப் பிராணிகளிடமும் ஆத்மாவாக இருப்பவன். வேதவடிவு ஆனவன். எங்கும் முகமுள்ளவன். பிறப்பு, இறப்பு, கிழத்தன்மை, நோய், இல்லற பயம் முதலியவைகளை அழிப்பவன், உதய காலத்தில் பிரம்ம வடிவானவன். பகலில் மகேச்வரன், மாலையில் திருமாமகள்கேள்வன், பகலைச் செய்பவன். சுவர்ணமயமான ஒரே சக்ரமுள்ள தேர் உடையவன். தாமரையைக் கையில் வைத்து இருக்கும் அந்த சூரியன் நம்மிடத்தில் அன்பு உள்ளவராக இருக்கட்டும். ஜோதி வடிவான பரமனுக்கு வணக்கம்.பிரம்ம அண்டத்திற்குக் காரணமாக இருப்பவரும் பெரிய சாட்சியாக இருப்பவருமான சூரியனுக்கு வணக்கம்.**

- சூரிய ஸ்தோத்திரங்கள்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!
தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான "ஸப்த வர்ண"
சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!

உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்
மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்

ஸப்தகிரி
சமய
மாத இதழுக்கு
சந்தா
செலுத்துங்கள்...



திருமலையப்பனின்
அக்ஷர பிரசாதமான
"ஸப்தகிரி"யை
திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்



# ஸப்தகிரி

சமய மாத இதழ்

(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)



.....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

இவ்விலைமாற்றம் செப்டம்பர் 2022 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
இவ்விலை மாற்றம் புதிதாகக்கட்டும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

விவரங்களுக்கு :

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.

தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

சமய மாத இதழ்



## ஜனவரி 2023

மலர் 02 இதழ் 06

சிறப்பு ஆசிரியர் :
**திரு. A.V. தர்மா ரெட்டி,** ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

## உள்ளுறை

பக்கம்

சுகம் தரும் சூர்ய சப்தமி -திரு. கே. இராமநாதன், சேலம். 7
திருமலையில் பாரிவேட்டை உற்சவம் 11
-திருமதி டி.கே.லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.
சங்க இலக்கியங்களில் சங்கராந்தி 14
-முனைவர் ந.மைதிலி, சென்னை.
வஸந்த பஞ்சமி -திருமதி எஸ்.வைஷ்ணவி, திருப்பதி. 18
ஜோதிட சாஸ்திரம்: புதன் 20
- முனைவர். ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை.
அகத்தியர் பூஜித்த தோரணமலை முருகன் 22
- திரு.அறந்தாகி சங்கர், சென்னை.
அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: சபரி 24
- திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.
வைகுண்ட ஏகாதசி - திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி. 31
அருளிச்செயல்களில் கூரத்தாழ்வான் நிர்வாஹம் 34
- திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், அம்பத்தூர்.
திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்
திருப்பாவையும் திருமலையப்பனும் 36
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.
108 திவ்வியதேச வைபவம் – திருக்கடித்தானம் 40
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.
அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்
திருநாமமும் உரையும்
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. 42
ஆயுர்வேதம் – இஞ்சி - திருமதி வி. உஷா, திருப்பதி. 44
ராசிபலன்கள் : ஜனவரி 2023 47
- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம்.
நீதிக்கதை : பெற்றோரைப் போற்றிடுவோம்! 49
- திருமதி எஸ். கீதா, சென்னை.
சித்திரக்கதை : அன்னதானப்பிரபு 52

**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : சூரியப்பிரபை வாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.
பின்னட்டை : சரஸ்வதி தேவி (சித்திரப்படம்)





உங்களுடன்...

# தமிழர் திருநாளும் சூரிய வழிபாடும்

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்"*

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதைப்போல, இயற்கைச் சக்திகளுக்குள் நம் முன்பு பெரிய தாகவும் பிரத்தியட்சமாகவும் தோன்றக்கூடிய சூரிய பகவானே இவ்வுலக இயக்கங்கள் அனைத்திற்கும் ஆதாரம் என்று மக்கள் உணரத் தொடங்கினர். பன்னெடும் காலத்திற்கு முன்பே சமுதாய நாகரீகத்தில் சிறந்து விளங்கிய தமிழர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா என்ன?

பழந்தமிழ் இலக்கியங்களிலும் சூரிய பகவான் சிறப்பிடம் பெற்று விளங்கினார். குறிப்பாக, ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் அக்காப்பியத்தின் தொடக்கத்தில், *"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"* என்று சூரிய பகவானைப் போற்றிப் பாடியுள்ளார்.

தமிழர்கள் பின்பற்றும் பஞ்சாங்கங்களும் பெரும்பாலும் சூரியனின் வானியல் நகர்வை ஒட்டியே உருவாக்கப்பட்டன. ஜோதிடக் கலையிலும் சிறந்து விளங்கிய தமிழர்கள் ஒவ்வொரு வருடமும் சூரிய பகவான் மகர ராசியில் பிரவேசிக்கும் திருநாளில் சூரிய வழிபாடு நடத்தித் தங்களின் நன்றியறிதலை வெளிப்படுத்தினர்.

*"எந்நன்றிகொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு"* என்ற திருவள்ளுவரின் நல்வாக்குக்கிணங்க, உழவுத் தொழிலைக் கண்ணெனப் போற்றிய தமிழ் மக்கள் அவ்வுழவுக்கே ஆதார சக்தியாக விளங்கிய சூரிய பகவானை மகர சங்கராந்தித் திருநன்னாளில் வருடம் தோறும் நன்றியுணர்வுடன் வழிபடத் தொடங்கினர்.

"ஞாயிறு போற்றுதும்" என்று பாடிய இளங்கோவடிகள், அதே சிலப்பதிகாரத்தில், *"மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்"* என்று மழைவளம் அருளும் வருணபகவானைப் போற்றிப் பாடியிருக்கிறார். எனினும், அம்மழைநீரைக் கொடுக்கும் மேகம் உருவாவதற்கும் அந்தச் சூரியனின் வெப்பமே காரணம் என்பதால், சூரிய பகவானை வழிபாடு செய்வது என்பது வருண பகவானையும் சேர்த்து வழிபடுவதற்குச் சமமாகும்.

எனவேதான், சூரிய பகவான் தட்சிணாயனம் எனப்படும் தென்திசை நோக்கிய தம்முடைய நகர்வினை விடுத்து, உத்தராயணம் எனப்படும் வடதிசை நோக்கிய நகர்வைத் தொடங்கும் மகர சங்கராந்தி நன்னாளாகிய பொங்கல் திருநாளில் நம் தமிழ்ப்பெருங்குடி மக்கள் அவரவருடைய இல்லத்திற்கு அருகில் உள்ள வெட்டவெளியில் புதுப்பானை வைத்துப் பொங்கல் பொங்கி, தாம்பூலம், கரும்பு, மஞ்சள் ஆகியவற்றுடன் சூரிய பகவானுக்குப் படைக்கின்றனர். பின்னர் சூரிய பகவானுக்குக் கற்பூர தீபம் காட்டி வழிபடும் நம் தமிழ் மக்கள், அவருடைய அருட்பிரசாதமாகிய பொங்கலைத் தங்கள் குடும்பத்தினருடன் பகிர்ந்து உண்டு மகிழ்கின்றனர்.



இங்ஙனம், உழைப்பு, தெய்வ நம்பிக்கை, வானியல் அறிவு, நன்றியின் வெளிப்பாடு ஆகிய நற்பண்புகள் அனைத்தும் வெளிப்படும் தமிழர் திருநாளாகிய பொங்கல் பண்டிகை, தனிச்சிறப்பு மிக்க திருநாளாக விளங்குகின்றது எனில் அது மிகையாகாது.



# சுகம் தரும் சூர்யசப்தமி



– திரு. கே. இராமநாதன், சேலம்,
94433 22202

*ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோல், பொன்கோட்டு
மேரு வலம் திரிதலான்!*

– சிலப்பதிகாரம்

நாள்தோறும் பூமிக்குக் கிழக்கில் உதித்து மேற்கில் மறையும் சூரியன் நவக்கிரகங்களின் அரசனாவான். இவ்வுலகின் இருளை நீக்கி ஒளியை நிரப்புவதுடன் அனைத்து உயிர்களுக்கும் ஆற்றலை வழங்குபவன் சூரியனே. உலக உயிர்களின் வாழ்வுக்கு முக்கியக் காரணியாக விளங்கும் சூரியனின் வலிமையையும் ஆற்றலையும் வேதங்களும் புராணங்களும் பெருமையுடன் போற்றித் துதிக்கின்றன. ரிக்வேதம் சூரியனை மூன்று வகையான அக்னியில் ஒன்று எனக் கூறுகிறது. யஜுர்வேதம் அனைத்து உலகங்களையும் ஒளிப்பெறச் செய்வது சூரியனே என்கிறது. அதர்வண வேதமோ சூரியனை வழிபடுவோர் இதயநோயிலிருந்து விடுபடுவர் என்று கூறுகிறது.

## சூரிய ஜெயந்தி :

தெற்கு திசையில் பயணிக்கும் சூரியன் வடக்கு திசையில் திரும்பிப் பயணிக்கத் தொடங்கும் நாளே ரத சப்தமி என்று அழைக்கப்படுகிறது. இது உத்தராயண காலத்தில் தை அமாவாசைக்குப் பின்னர் வரும் ஏழாம் நாளாகும். அன்றுமுதல் தட்சிணாயன காலம் நிறைவடைந்து உத்தராயண காலம் தொடங்குகிறது. சூரியன் தன் வடக்கு நோக்கிய பயணத்தின் தொடக்கத்தில் இந்த சப்தமி நாளிலிருந்துதான் சிறுகச் சிறுக ஒளிக்கதிர் வெப்பத்தைக் கூட்டுகிறான் என்று சாத்திரங்கள் கூறுவதை இன்றைய அறிவியலும் ஏற்கிறது. சிறப்பு ஒளி பிறக்கும் நாளான ரத சப்தமி சூரியனின் பிறந்த நாளாகவே கொண்டாடப்படுகிறது. இந்த நாள் சூர்ய சப்தமி, அசலா சப்தமி, பானு சப்தமி, ஆரோக்ய சப்தமி என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது.

## நமஸ்காரப் பிரியன் :

ஸ்ரீமந்நாராயணனின் அம்சமாகப் போற்றப்படும் சூரியன் அவரது கண் ஒளியிலிருந்து பிறந்தவனாவான். எனவேதான் சூரிய நாராயணன் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறான். ஆதித்யன், மித்ரன், சவிதா, அர்க், பாஸ்கரன், மரீச்சி, திவாகரன் என்று சூரியன் பல பெயர்களாலும் அழைக்கப்படுகிறான். அலங்காரப் பிரியன் என்று போற்றப்படும் ஸ்ரீமந்நாராயணனைப் போல சூரியதேவனும்

நமஸ்காரப் பிரியன் என்று போற்றப்படுகிறான். வேதகாலம் தொட்டே வழக்கத்தில் உள்ள சூரிய வழிபாடு, காலையில் செய்யும் சூரிய நமஸ்காரமும் மாலையில் சந்தியா வந்தனமும் நாம் செய்யும் நித்யகர்மங்களில் ஒன்றாக இன்றும் நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகிறது. சூர்யாஷ்டகம், ஆதித்ய ஹிருதயம், காயத்ரி, சூரிய சஹஸ்ரநாமம் ஆகியவை சூரியனின் பெருமைகளை எடுத்துக் கூறிப் போற்றி வணங்குகின்றன.

**அதிதியின் மகன் :**

சூரியனின் பிறப்பு குறித்து நெடுங்காலத்திலிருந்தே வழங்கிவரும் கதை ஒன்று உண்டு. தவ ஆற்றல் மிக்க முனிவர் காஸ்யபரின் மனைவி அதிதி ஆவாள். கருவுற்றிருந்த அதிதி ஒருநாள் மதிய வேளை தன் கணவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டு இருந்தாள். அப்போது ஒரு அந்தணர் மிகுந்த பசியுடன் வீட்டு வாசலில் வந்து நின்று உணவு கேட்டான். கணவனுக்கு உணவு பரிமாறிய அதிதி கருவுற்றிருந்ததால் மெல்ல நடந்து வந்து அந்தணருக்கு உணவு கொடுத்தாள். அவள் தாமதமாய் வந்து உணவு கொடுத்ததாக நினைத்த பிராம்மணன் மிகுந்த கோபம் கொண்டான்.

பசியுடன் வந்து நிற்கும் எனக்குத் தாமதமாய் உணவு கொடுத்த காரணத்தால் உன் வயிற்றில் பிறக்கும் குழந்தை இறந்து பிறப்பான் என்று சாபமிட்டான். இதனால் அச்சமடைந்த அதிதி காஸ்யப முனிவரிடம் தன் மன வேதனையைக் கூறினாள். அதைக் கேட்ட அவர், “குற்றமில்லாத பெண்ணே, நீ கலக்கமடைய வேண்டாம். என்றும் அழிவில்லாத மகனை நீ பெற்றெடுப்பாய். எனவே கவலை கொள்ளாதே” என்று மன ஆறுதலும் வாழ்த்தும் கூறினார். அவரது வாழ்த்துப் பெற்ற அதிதி என்றும் அழிவில்லாத ஒளிமயமான சூரியனை மகனாகப் பெற்றெடுத்தாள்.

**அருள் பெற்றவர்கள் :**

மாமன்னன் இக்ஷ்வாகுவின் பரம்பரையில் பிறந்த இராமபிரான் சூரிய குலத்தைச் சார்ந்தவர் ஆவார். சூரிய வழிபாடு செய்தபின்னர் போர்க்களம் சென்ற அவர் அசுரன் இராவணனை வெற்றி கண்டார். பஞ்சபாண்டவர்களின் தலைவனான தருமன் சூரியனை வழிபட்டு அள்ள அள்ளக் குறையாது உணவளிக்கும் அட்சயபாத்திரத்தைப் பெற்றார். துர்வாசரின் வரத்தால் பாண்டவர்களின் தாயான குந்திதேவி சூரியனை வணங்கி வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்கிய கர்ணனை மகனாகப்





பெற்றெடுத்தாள். வாயுவின் மகனும் சொல்லின் செல்வனுமான அனுமன் இலக்கண அறிவு பெற்றது சூரியதேவனிடமே. பீஷ்மர் தன் மரணத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தது ரத சப்தமி நாளே. சூரிய தேவனின் மகனான சனீஸ்வரன் தன் பெற்றோரான சூரியன் மற்றும் சாயாதேவியை பாதபூசை செய்து வழிபடும் நாள் ரத சப்தமியே.

### ஆரோக்ய சப்தமி :

தொழுநோயைக் கூட குணமாக்கும் ஆற்றல் கொண்ட சூரியன் குறித்து கதை ஒன்று உண்டு. ஸ்ரீகிருஷ்ணரின் மகனான சாம்பன் உடல் வலிமை மிக்கவன். ஒருமுறை கிருஷ்ணரை சந்திக்க வந்த துர்வாச முனிவரின் உடலைக் கண்டு எள்ளி நகையாடினான். கர்வம் கொண்டுள்ள சாம்பனைப் பார்த்து நீ தொழுநோயாளியாவாய் என்று துர்வாசர் சாபமிட்டார். இதனால் தொழுநோயாளியாகித் துன்பமடைந்த சாம்பன் தன் தவறை உணர்ந்து தந்தையான ஸ்ரீகிருஷ்ணரிடம் முறையிட்டான். அதற்கு அவர், நீ சூரியதேவனை முறை தவறாது வழிபாடு செய்தால் இந்த நோயிலிருந்து விடுபடலாம் என்றார். அதை ஏற்ற சாம்பன் சூரியதேவனை முறை தவறாது வழிபட்டுத் தன் நோயிலிருந்து விடுதலை பெற்றான். அதனால் ரத சப்தமி ஆரோக்ய சப்தமி என்றும் அழைக்கப்படுகிறது.

### மும்மூர்த்திகளின் வடிவம் :

மனித உயிர்களாகிய நாம் கண்ணில் காணும் தெய்வமாகத் திகழ்வது சூரியனே. நாம் செய்யும் அனைத்துச் செயல்களையும் காணும் சூரியதேவன் கர்ம சாட்சியாக விளங்குகிறான். சூரியதேவனின் ரதம் நான்கு சமகோணங்கள் கொண்ட சதுர வடிவம். இத்தேர் ஒரு சக்கரத்தில் சுழல்கிறது. அந்தச் சக்கரம் காலச் சக்கரம் என்று அழைக்கப்படுகிறது. அத்தேரை இழுத்துச் செல்லும் ஏழு குதிரைகள் ஏழு வண்ணங் கள் என்றும் அல்லது வாரத்தின் ஏழு நாட்கள் என்றும் கூறப்படுகிறது. முப்பெரும் தேவர்களின் ஒன்றுபட்ட வடிவமாகத் திகழும் சூரியனை,

*பிரம்ம ஸ்வரூபம் உதயே,*
*மத்யான ஹேது மஹேஸ்வரஹ,*
*அஸ்த காலே ஸ்வயம் விஷ்ணுஹு*
*த்ரய மூர்த்தி திவாகரஹ*

என்று, உதயாதி நேரத்தில் பிரம்மாவாகவும், மதிய வேளையில் சிவனாகவும், மாலை நேரத்தில் விஷ்ணுவாகவும் சூரியன் தோற்றமளிப்பதாக ரிக்வேதம் கூறுகிறது.

### இலையும் இறைவனும் :

வேதகாலத்திலிருந்தே இறைவனை வழிபடும் போது சிறப்பு மிகுந்த இலைகளையும் சேர்த்து வணங்கும் வழக்கம் உள்ளது. அவ்வகையில் மஹா விஷ்ணுவுடன் துளசி இலையையும், சிவபெருமானு டன் வில்வ இலையையும், விநாயகருடன் அருகம் புல்லையும் வைத்து வழிபடுவது போல, சூரிய வழிபாட்டில் எருக்க இலை முக்கியத்துவம் பெறு





கிறது. வடமொழியில் அர்க் என்பது சூரியனையும் எருக்க இலையையும் குறிப்பிடும். சூரியன் பயணிக்கும் ரதம் நான்கு சமகோணங்கள் உள்ள சதுர வடிவம் கொண்டதாகும். அவ்வகையில் எருக்க இலையும் சதுர வடிவில் உள்ளதால் அது சூரியனின் ரதவடிவமாகக் கருதப்படுகிறது. மேலும் எருக்க இலை தோல் நோய், தொழுநோய், மூட்டு வலிகளை குணமாக்கும் தன்மை கொண்டது. எனவேதான் ரத சப்தமி நாளில் நீராடும் நேரத்தில் ஏழு எருக்க இலைகளை தலையில் ஒன்று, இரண்டு தோள்களில் இரண்டு, இரண்டு முழங்கால்களில் இரண்டு, இரண்டு பாதங்களில் இரண்டு என்று வைத்து நீராடி சூரியதேவனை வணங்கி வழிபடுவர். இத்தகைய வழிபாட்டால் ஏழு தலைமுறைப் பாவங்களும் நீங்கும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

### திருக்கோயில்களில் விழா

சூரியன் ஸ்ரீமந்நாராயணனின் அம்சமாகப் போற்றி வணங்கப்படுகிறான். எனவே ரத சப்தமி நாளில் வைணவத் திருத்தலங்களில் திருமால் சூரியப் பிரபை வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார். நம் இந்தியத் திருநாட்டில் ரத சப்தமி விழா ஒரிசாவில் உள்ள கோனார்க், ஆந்திராவில் உள்ள அரசவெல்லி, திருச்சியில் உள்ள ஸ்ரீரங்கம், கும்பகோணத்தில் உள்ள சூரியனார் கோயில், பீஹாரில் உள்ள தட்சிணார்க் கோயில், குஜராத்தில் உள்ள சூர்ய பஹார் கோயில் ஆகிய இடங்களில் சிறப்பான விழாவாகக் கொண்டாடப் படுகிறது. அத்துடன் திருப்பதி திருச்சானூர் பத்மாவதி தாயாரின் கோயிலருகில் அமைந்துள்ள சூரியன் கோயிலிலும் சிறப்பான வழிபாடு நடைபெறுகிறது.

### திருமலையில் விழா :

திருமலையில் ரத சப்தமி ஒரு நாள் பிரம்மோற்சவ விழாவாக மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் திருமலையப்ப ஸ்வாமி ஸ்ரீதேவி, பூதேவியருடன் பக்தர்களுக்குக் காட்சி தந்து உலா வருகிறார். திருமலையப்ப ஸ்வாமி சூரியப் பிரபை வாகனம், சிறிய சேஷ வாகனம், கருட வாகனம், ஹனுமன் வாகனம், கல்ப விருட்ச வாகனம், சர்வ பூபால வாகனம் ஆகியவற்றில் உலா வந்து இறுதியாக சந்திரப்பிரபை வாகனத்தில் பயணித்துத் தன் ஏழு வாகன உலாவை நிறைவு செய்கிறார்.

கண்ணுக்கு ஒளியையும், மனதுக்கு ஆற்றலையும், உடலுக்கு நலத்தையும் தந்து நம்மைக் காத்திடும் சூரிய தேவனை ரத சப்தமி நாளில் நாமும் வணங்கி அருள் பெறுவோம்.





# திருமலையில் பாரிவேட்டை உற்சவம்

**– திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,**
**திருப்பதி,9440120758**

*''பரித்ராணாய சாதூநாம் வினாசாய ச துஷ்க்ருதாம்*
*தர்மஸம் ஸ்தாபனார்தாய ஸம்பவாமி யுகே யுகே''*

“அதர்மம் தலை தூக்கும் போதெல்லாம் அதை அழித்து தர்மத்தை நிலை நாட்ட, துஷ்டர்களை சம்ஹரித்து, சாதுஜனங்களை ரக்ஷிக்க ஒவ்வொரு யுகத்திலும் நான் தோன்றுவேன்” என்று மஹாபாரத போரின் ஆரம்ப நாளன்று பாண்டவ இளவலான அர்ச்சுனனின் தேர்க்கட்டிலில் நின்று கொண்டு கீதாசார்யனாக வாக்குறுதி கொடுத்தார் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்த ஸ்ரீமந்நாராயணன். தஞ்சம் என்று வந்தவர்களை ரஷிப்பதற்காக அந்த எம்பெருமான் எடுத்த அவதாரங்கள் எத்தனையோ.

*''மீனோடாமை கேழல், கோளரியாய், வானார் குறளாய், மழுப்படை*
*பின்னுமிராமரிருவராய்ப் பாரில் துன்னிய பரந்தீர் துவரை மன்னனுமாய்*
*கலிதவிர்த்தருளுங் கற்கியாய் மற்றும் மலிவதற்கெண்ணும் வல்வினை மாற்ற*
*நானாவுருவங் கொண்டு நல்லடியோர் வானோர் இன்பம் இங்குற வருதி.*

என்று ஸ்வாமி தேசிகன் தனது பிரபந்தத்தில் பகவான் பூலோகத்தில் எடுத்த பத்து அவதாரங்களையும் போற்றியுள்ளார்.

இந்த ஸ்ரீமந்நாராயணனே இந்த கலியுகத்தில், கலியின் பிடியிலிருந்து பக்தர்களைக் காப்பாற்ற இந்த திருமலையில் ஸ்ரீநிவாஸப்பெருமானாக அர்ச்சாரூபியாக எழுந்தருளியுள்ளார். அந்த யுகங்களைப் போல நமது திருவேங்கடமுடையானுக்கு எங்கேயும் போக வேண்டிய அவசியமோ, அஸ்திர பிரயோகம் செய்யும் தேவையோ ஏற்படவில்லை. வலது திருக்கரத்தால் தனது திருவடிகளைத் தானே காட்டித் தன்னை வந்து தஞ்சமடையுங்கள் என்று காட்டிக் கொடுக்கும் அந்த எம்பெருமானிடம் “கோவிந்தா! கோவிந்தா!” என்கிற நாமாவளியைச் சொல்லிக் கொண்டு பக்தர்கள் தான் இந்த திருமலைக்கு ஓடி வந்து கொண்டிருக்கிறார்கள். இரும்பை இழுக்கும் காந்தத்தைப் போல எல்லோரையும் ஈர்க்கும் ஆகர்ஷண சக்தி திருமலையப்பனிடம் உள்ளது.

# கண்ணன் கருத்துரை



*ஆத்மௌபம்யேன ஸர்வத்ர ஸமம் பச்யதி யோடர்ஜுன।*
*ஸுகம் வா யதி வா து:கம் ஸயோகீ பரமோ மத:॥*

(6-32)

**எவன் ஒருவன் உடன் வாழும் உயிர்களுக்கு வரும் இன்ப துன்பங்கள் தனக்கு வந்ததாகக் கருதி, உதவி செய்து அனைவரையும் தன்னோடு சமமாகப் பார்த்துக் கொள்கிறானோ அவன் இறைவனுக்கு இனியவன் ஆவான்.**

தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.



அந்த எம்பெருமானுக்கு நடைபெறும் உற்சவாதிகளில் சில நித்யோத்ஸவம், சில வாரோத்ஸவம், சில பக்ஷோத்ஸவம், இன்னும் சில வருடாந்திர உற்சவங்களாக கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. அவற்றுள் இப்போது நாம் பார்க்கப் போவது "பாரிவேட்டை உற்சவம்". இந்த உற்சவம் நமது திருமலையில் தை மாதத்தில் பொங்கல் பண்டிகையின் மூன்றாம் நாள் கணுவு(மாட்டுப் பொங்கல்) பண்டிகையன்று நடைபெறுகிறது.

கடகரேகையில் சஞ்சரித்து கொண்டிருந்த சூரியபகவான் மகர ரேகையில் பிரவேசிப்பதே மகர சங்கராந்தி. இதை உத்தராயண புண்ய காலம் என்பார்கள். அதுவே தை மாதப் பிறப்பு. தமிழகத்தில் இதை பொங்கல் பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். முதல் நாள் போகிப்பண்டிகை, அடுத்த நாள் பொங்கல் பண்டிகை, மூன்றாம் நாள் கணுவுப் பண்டிகை என்று இந்த பாரிவேட்டை உற்சவம் நடைபெறுகிறது. பரிவேட்டை என்றால் அந்த காலத்தில் ராஜாக்கள் குதிரை மீது அமர்ந்து அடர்ந்த காட்டிற்குள் துஷ்ட மிருகங்களை வேட்டையாடப் போவார்கள். பரி என்றால் குதிரை. நாளடைவில் இந்த பரிவேட்டை என்பது மறுவி பாரிவேட்டையாகிவிட்டது.

இனி இந்த உற்சவம் நமது திருமலையில் திருவேங்கடமுடையானுக்கு எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் பார்க்கலாம். அன்று காலையில் கீழ் திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் கோயிலில் தனி சன்னிதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆண்டாள் பிராட்டி சூடி கொடுத்தனுப்பிய புஷ்ப (இது ஆண்டாள் மாலை என்றே வழங்கப்படுகிறது) மாலையை திருமலையில் பெரிய கேள்வி அப்பன் பெரிய ஜீயர் மடத்துக்கு கொண்டு வரப்பட்டு, அன்று மாலை தோமாலை சேவையின்போது மூலமூர்த்தியான திருவேங்கடத்து எம்பெருமானுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. உற்சவ மூர்த்தியான திருமலையப்ப ஸ்வாமியும், ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியும் தனித்தனி தங்க திருச்சி எனப்படும் தோளுக்கினியானில் கொலுவிருக்க, நான்மாட வீதிகளில் புறப்பாடு கண்டு, பாரிவேட்டை மண்டபத்திற்கு எழுந்தருள்கிறார்கள். திருமலையப்ப ஸ்வாமி சர்வபூபாலனாக, ஒரு சக்கரவர்த்தி அலங்காரத்தில் திருத்தோள்களில் சங்கு, சக்கரத்தோடு, வாள், கேடயம், வில், அம்பு என்று பஞ்சாயுதங்களோடு எழுந்தருளுகிறார். வேட்டைக்குப் போக ஆயுதங்கள் வேண்டுமே.

*"வனமாலை சுதி சார்ங்கி சங்கி, சக்ரிச, நந்தகி"* என்னும் படியாக பஞ்ச ஆயுதங்களையும் தரித்துக்கொள்கிறார் ஸ்வாமி.

பாரிவேட்டை மண்டபத்தில் ஒன்றாக பெருமான்கள் இருவரும் திருமஞ்சனம் கண்டருளுகிறார்கள். அலங்காரம் – விசேஷ பூஜை முடிந்ததும் வேட்டைக்கு கிளம்புகிறார்கள். சேஷாசல காட்டிற்குள் எத்தனையோ துஷ்ட மிருகங்கள் சஞ்சாரம் செய்வதை கேள்விப் பட்டிருக்கிறோம். அத்துடன் கண்ணுக்குப் புலப்படாத துஷ்ட சக்திகளும் இருக்கலாம் அல்லவா. இவைகளால் தன்னை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு எந்த ஆபத்தும் வராமலிருக்க எம்பெருமான் வேட்டைக்குச் செல்வதாக ஐதீகம். அங்கே அம்பு போடுதல் என்கிற நிகழ்வு நடைபெறும்.

எம்பெருமான்களின் சார்பாக அர்ச்சக ஸ்வாமியே துஷ்ட மிருகங்களின் மீது அம்பு எய்வது போல ஒரு அபிநயத்தை நடத்துகிறார்கள்.




எம்பெருமானே இந்த வேட்டையை நடத்துகிறார் என்கிற அபிப்ராயத்தோடு, தரிசிக்கின்ற பக்தர்கள் அனைவரும் “கோவிந்தா! கோவிந்தா!!” என்று ஆரவாரம் செய்ய அது அந்த காடு முழுவதும் எதிரொலிக்கும். இந்த கோவிந்த நாமாவலியை கேட்டே துஷ்ட மிருகங்கள் ஓடிப் போய் விடும் அல்லவா. கோவிந்த நாமத்திற்கு இல்லாத சக்தியா? “பகவான் கட்டிப் பொன் போலே, அவரது திருநாமங்கள் ஆபரணங்களைப் போலே” என்றார்கள் பெரியோர்கள். தங்கக்கட்டி விலை உயர்ந்தது தான்; ஆனால், அதை தலையில் சுமக்கவா முடியும்? ஆனால், ஆபரணங்களை நமது மேனியில் பூட்டி அழகு பார்க்கலாம் அல்லவா. அது போல பகவான் நம்மை ஆபத்துக்களிலிருந்து ரக்ஷிக்க நேராக வர மாட்டார். ஆனால், அவரது திருநாமங்களை நாம் சொல்லும் போது, அந்த திருநாமங்கள் அவரை நம்மிடம் இழுத்துக் கொண்டு வந்துவிடும். நாமங்களின் சக்தி அப்படி.

இந்த நிகழ்விற்குப் பின்னர் மீண்டும் எம்பெருமான்கள் இருவரும் பாரி வேட்டை மண்டபத்திற்கு எழுந்தருள, அங்கே தளிகை, சமர்ப்பிக்கப் படும். பின்பு கற்பூர மங்கள ஹாரத்தியுடன் உற்சவம் நிறைவுக்கு வரும். இதில் திருமலை திருப்பதி பிரதான தேவஸ்தான அதிகாரி, ஆலோசனை கமிட்டியின் தலைவர் உள்பட தேவஸ்தான அதிகாரிகளும், ஆலயப் பணியாளர்களும், வேத பாராயண பண்டிதர்களும், அர்ச்சக பரிவாரங்களும் கலந்து கொள்வார்கள். ஏராளமான பக்தர்கள் இதை தரிசித்து எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாகிறார்கள். மீண்டும் ஆனந்த நிலையத்துக்கு பக்தர்கள் புடை சூழ, ராஜாதி ராஜனாக அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனாய் திரும்புவார் எம்பெருமான்.

*“வேங்கடாத்ரி சமம் ஸ்தானம் பிரம்மாண்டே நாஸ்தி கிஞ்சன*
*வேங்கடேச சமோ தேவோ ந பூதோ ந பவிஷ்யதி”*

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*த்$_3$ருஷ்ட்வாந்தரங்க$_3$ாவ்ருதயாத$_3$வம் தம் ஸ்மித்வா பிசாச: பரிப$_4$ாவ்ய பூ$_4$ரி ।*
*ராமாநுஜார்யம் சரணம் ப்ரபத்$_3$ய ராஜாத்மஜம் ஸ்வம் ச ஜகௌ$_3$ள மஹாக$_4$ம் ॥*

**(18)**

**அந்தரங்கசிஷ்யர்களோடு கூடிய யாதவனைக் கண்டு சிரித்து, அவனை மிகவும் அவமானப்படுத்தி, பிசாசமானது ராமாநுஜரை சரணமடைந்து, அரசனின் பிள்ளையையும் தனது பெரும்பாவத்தையும் ஒருங்கே விட்டது.**

– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது




# சங்க இலக்கியங்களில் சங்கராந்தி

**தோற்றம்:**

மனித மனம் அழகுணர்ச்சி உடையது. எதையும் நலமாக வளமாகக் காண விரும்புவது. இப்படி மனம் கொண்ட மனிதன் எந்த ஒன்றையும் காரண காரியத்தோடு ஆராய்ந்து பார்த்து சமுதாயம் மலரக் காரணன் ஆகிறான். இந்த அடிப்படையில் தோன்றியன விழாக்களும் பண்டிகைகளும். மனிதநேயம் தழைத்து ஒருமைப்பாட்டு உணர்வு மேலோங்கி யாவரும் சமம் என்று தெளிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

அந்த வகையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நன்றி தெரிவிக்கும் விதமாக ஒரு விழா கொண்டாடப்பட்டு வந்துள்ளது. அது பொங்கல் விழா. இவ்விழா குறித்து சங்க இலக்கியங்களில் என்ன கருத்துக்கள் பதிவிடப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை வழி காண்போம்.

**நோக்கம்:**

பொங்கல் விழா கொண்டாடுவதன் நோக்கம் மாதம் மும்மாரி பொழிந்து நாடும் வீடும் சிறக்க வேண்டும். மக்கள் பசி, பிணி நீங்கி வாழ வேண்டும். மரபுசார் பண்பாடு மற்றும் கலாச்சாரம் பாது காக்கப்பட வேண்டும். சிறப்பு நோக்கம் என்ன வெனில், தன்னை நன்கு வாழவைத்த இயற்கை மற்றும் உயிரினங்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் இவ்விழா கொண்டாடப்பட்டது. நன்றிக்கு உரியவர்கள் பூமி, கதிரவன், நீர்நிலைகள், கால்நடைகள். இவ்விழா, பொங்கல் விழா, சூரிய நாராயண விழா, மகரசங்கராந்தி, இந்திரவிழா எனப் பல்வேறு பெயர்களில் கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

இப்பெயர்கள் கூட ஒரு வகையில் படிநிலைகள் என்று சொல்லலாம். சங்க இலக்கியங்களில் பொங்கல் என்ற பதம் ஒரு இடத்திலும் இல்லை. பிற்காலத்தில் எழுந்த சீவகசிந்தாமணியில் தான் முதல் முதலாக பொங்கல் என்ற பதம் வருகிறது.

**இந்திரவிழா:**

மருதநிலம் வேளாண்மைக்கு ஏற்ற நிலம். இதற்குரிய தெய்வம் இந்திரன். உழுது, விளைத்துப் பயன் பெற்றோர் அதற்குக் காரணமாக இருந்த இந்திரனுக்கு நன்றி செலுத்த இவ்விழா எடுத்தனர். விவசாயத்திற்குத் தேவை மழை.மழை தருவது

# உழவின் மேன்மை

உழவின் மேன்மை அறிந்து உழவர் திருநாள் என்றும், அறுவடை நாள் என்றும் கொண்டாடி வந்துள்ளனர். வள்ளுவரும்,

*“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழன்றும் உழவே தலை”*

என்று உழவின் மேன்மையை வலியுறுத்திக் கூறினார். புதிதாகக் கறந்து நுரையெழும்பும் தீம் பாலிலே புத்தரிசியையிட்டு, சந்தனக்கட்டைகளை விறகாகக் கொண்டு அடுப்பெரித்து ஆக்கிய பொங்கலைப் பலரோடு பகிர்ந்து உண்ணுகின்ற வழக்கத்தை மேற்கொண்டு வந்தனர்.

மருத நிலம் மக்கள் மட்டுமின்றி தை மகளை வரவேற்று நன்றி விழாவை குறிஞ்சி நில மக்களும் கொண்டாடி வந்துள்ளனர். அத்தகைய தொன்மைச் சிறப்பு வாய்ந்த பொங்கல் பண்டிகை உழவர்களுக்கு மட்டும் உரியதல்ல. உழவார் உலகத்தார்க்கு அச்சாணியானவன் என்கின்றார் வள்ளுவர். எனவே, கதிரவனுக்கு நன்றிசெலுத்தும் பொங்கல் உலகத்திற்கே பொதுவானது. அதனை ஒரு பண்டிகையாகக் கொண்டாடும் வழக்கத்தை நம் முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள்.



*“பைதுஅற விளைந்த பெருஞ்செந் நெல்லின் தூம்புடைத்*
*திரள்தான் துமிந்த வினைஞர்”*

என அறுவடை செய்யும் உழவரைப் பற்றி பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. இவ்வாறு உழவைப் போற்றிய பண்டைத் தமிழர் அறுவடை விழாவைக் கொண்டாடி உள்ளதை உணரமுடிகின்றது.

மேகம். மேகங்களுக்கு அதிபதி இந்திரன். எனவே இந்திர விழா.

இவ்விழா 28 நாட்கள் கொண்டாடப்பட்டதாக சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. முரசறை வோன் முரசறைந்து இச்செய்தியை அறிவிக்க, மக்கள் நகரைப் பலவிதமாக அலங்கரித்து, கோயில்க ளில் சிறப்பு பூஜைகள் நடைபெறவும் தயார் நிலையில் இருந்தனர். பழைய மணலை நீக்கி எங்கும் புது மணலைப் பரப்பி பொற்பாலிகை முதலானவற்றுடன் விழா இனிதே நடைபெற ஆர்வம் காட்டியுள்ளனர்.

எல்லாக் காலங்களிலும் மருதநிலம் விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளித்ததன் நோக்கம் வாழ்வாதாரம் அதுவே என்பதாம்.

**நீர்நிலைகள் வழிபாடு :**

நீர்நிலைகள் தெய்வமாகப் பார்க்கப்பட்டன. தைந்நீராடல் ஒரு புனித நீராடலாக இருந்துள்ளது. இதனை,

*“தைத் திங்கள் தண்கயம் படியும்”*

–நற்றிணை

*“தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ”*

–கலித்தொகை

முதலான தொடர்கள் நிறுவும். மேலும், தாயும் மகளுமாக பனி நீரில் மூழ்கி எழுந்து, ஆங்கே நதிக்கரையில் ஆதிரையோனுக்குச் செய்யும் ஹோமத்தீயை வலம் வருவர்.

பின்னர் முன்பிறவியில் செய்த தவப்பயனோ இன்று நாம் இருப்பதும், இந்த வைகையில் குளிப்பதும் என்று வியந்து, கண்ணாடி போலத் தெளிவாகத் தெரியும் நீரே, எம் வேண்டுதல்களையும் விருப்பங்களையும் நீ தைத்துக் கொள்ளும் வண்ணம் தெளிவாக இருக்கிறாய், தை நீரே, நீ தான் எங்கள் வேண்டுதல்களை வாங்கிக்கொள்ளத் தக்கவள் என்று கூறி வணங்கியதைப் பரிபாடல் தெரிவிக்கிறது.

**கதிரவன் விழா :**

பின்னர் பயிர்கள் வளர நீர்வளம் மட்டுமே போதாது. கதிரவன் ஒளியும் அவசியம் என்பதை உணர்ந்ததனால் அவ்விழா சூரிய நாராயண விழா என்றானது. தன் கண்முன் நேரே காணும் இயற்கையை வணங்க தேவைப்பட்டதால் பெயர் மாற்றம் உண்டானது.

*"அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த பாய்*
*கரும்பின் கொடிக்கீரை சாறு கொண் களம் போல்"*

என்று புறநானூற்றில் குறுங்கோழியூர் கிழார் பாடியுள்ளார். இதனை நோக்க நெல்லோடு வேயப் பட்ட கூரை வீடுகளிலும் கருப்பஞ்சருகு வேய்ந்த கூரை வீடுகளிலும் இவ்விழா கொண்டாடப்பட்டமை தெளிவு.


**மகரசங்கராந்தி:**

இப்பெயரில் வடநாட்டில் கொண்டாடினார்கள். தைமாதம் உத்தராயண புண்ணிய காலம். தைமாதம் முதல் ஆனி மாதம் முடிய சூரியன் தென்திசையில் இருந்து வடதிசை நோக்கிப் பயணம் செய்வார்.

அப்போது கும்ப ராசியில் இருந்து மகர ராசிக்கு வருவார். இப்படி மகரத்திற்கு வருவதால் மகர சங்கராந்தி ஆயிற்று.

**உழவின் மேன்மை குறித்து வரலாற்றுச் சான்றுகள் :**

பழங்காலப் பெண்கள் தை மாதத்தில் நோன் பிருந்த செய்திகளைச் சங்க இலக்கியங்கள் சில



குறிப்பிட்டிருக்கின்றன. தை மாதத்தில் நோன்பி ருந்து, வைகை ஆற்றில் நீராடி, சிறந்த கணவர் வாய்க்கப்பெற வேண்டும் என பெண்கள் வேண்டியதாக பரிபாடல் கூறுகின்றது.

*"தீயெரிப் பாலுஞ் செறிந்த முன் பூற்றியோ*
*தாயருகா நின்று தவத் தைந்நீராடல்*
*நீயுரைத்தி வையை நதி"* –பரிபாடல் 11

**முடிவுரை:**

இவ்விழா, பொங்கல் விழா என்ற பெயரில் கொண்டாடப்படவில்லை என்றாலும், புனித நீராடல், இந்திர விழா, தைந்நீராடல், உழவே தலை ஆகிய இச் சொற்றொடர்களை ஆதாரமாக வைத்துப் பார்த்தால் மரபுசார் வழிப்பட்ட விழா, பண்பாட்டுக் கலாச்சார விழா, தொன்மை விழா என்பது விளங்குகிறது. இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம், அவற்றிற்கு நன்றி தெரிவிக்க வேண்டியதன் அவசியம் ஆகியன இக்காலச் சமுதாயம் உணர வேண்டும் என்பது முடிவாகும்.

**– முனைவர் ந. மைதிலி, சென்னை,**
**99529 29685**

## 2023, பிப்ரவரி மாத பண்டிகைகள், பருவ தினங்கள் மற்றும் தி.தி.தே. ஆலய உற்சவங்கள்

| | |
|---|---|
| 01 | பீஷ்ம ஏகாதசி |
| 05 | இராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி |
| 07 | திருமழிசையாழ்வார் திருநட்சத்திரம் |
| 11-19 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 11-20 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 18 | மஹாசிவராத்திரி |
| 19-27 | தொண்டமநாடு ஸ்ரீபூ சமேத ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 28-மார்ச்8 | தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |

# பொங்கலோ! பொங்கல்!!

"தை" பிறந்தது! "தை" பிறந்தது!
நல்வழியும் பிறந்ததுவே!
மணி விளைந்தது! நெல் விளைந்தது!
மகிழ்ச்சியும் மலர்ந்ததுவே!

கரும்பும் விளைந்தது! கரும்பும் விளைந்தது!
கன்னல் சுவைத்ததுவே!
இஞ்சியும் விளைந்தது! மஞ்சளும் விளைந்தது!
ஏற்றம் வளர்த்ததுவே!

பழையன கழிந்தன! புதியன புகுந்தன!
பண்பும் நிறைந்ததுவே!
சூரியன் வரவே, பனியும் விலகி,
சோம்பலும் ஓடியதே!

உழைப்பெனும் அமுதம், உளத்தினில்
ஓங்கி வளர்ந்ததுவே!
தழைத்திடும் உலகம்! தழைத்திடும் உழவு!
தரணியும் உயர்ந்ததுவே!

அறுவடை தொடங்கி, தானியம் பெருகி
அவனியில் இன்பம் பொங்கியதே!
நறுமலர் பூத்தன! எங்கும் நறுமணம்
பொங்கிடும் வேளை வந்ததுவே!

துறுதுறு மனத்தில் சர்க்கரைப் பொங்கல்!
சுவையும் நாவினில் பொங்கியதே!
விறுவிறு நடையில், வீட்டுப் பெண்கள்
பெருமிதப் பொங்கல் பொங்கினரே!



பச்சைப் பசுமைப் பயிர்கள் யாவும்
பாங்குற விளைவைத் தந்தனவே!
மொச்சை, துவரை, பூசணிக் காயும்
மேலாம் சுவையைத் தந்தனவே!

பச்சைக் கிளிகள் பயிர்களில் பறந்து
பாடிப் பரவி மகிழ்ந்தனவே!
நிச்சயமாக நித்தமும் இறையருள்
நெஞ்சினில் மகிழ்ச்சி நிறைத்திடுமே!



மனத்தில் மகிழ்ச்சி! மாநிலம் அமைதி!
மங்கலம் எங்கும் தங்கிடுமே!
சினமது தவிர்த்துச் செம்மை நிறைந்து,
செங்கதிர்! ஒளிக்கதிர் வணங்கிடுவோம்!

உழவர் உழைத்துத் தானிய விளைவை
உயர்வாய்த் தந்தனர்! போற்றிடுவோம்!
பொழுதெலாம் உழவினில் உற்றுழி உதவிசெய்
பசுக்கள், காளைகள் போற்றிடுவோம்!



– முனைவர் ச. செந்திலாண்டவன்,
சென்னை,94445 82856.









திருமதி எஸ். வைஷ்ணவி,
திருப்பதி.

# வஸந்த பஞ்சமி

மாக மாதம் சுக்ல பக்ஷ பஞ்சமியன்று முப்பெரும் தேவிகளில் கல்விக் கடவுளாக போற்றப்படும் ஸ்ரீசரஸ்வதி தேவியின் அவதார நாளாக வட இந்தியாவிலும் அனைத்து சரஸ்வதி ஆலயங்களிலும் கொண்டாடப்படுகிறது. பயிர்கள் செழித்து பூக்கள் பூத்துக் குலுங்கும் வஸந்த காலத்தின் (வஸந்த ருது) தொடக்கத்தில் வரும் பஞ்சமியாதலால் இதனை வஸந்த பஞ்சமி என்று அழைப்பர்.

வஸந்த பஞ்சமியன்று அதிகாலையில் எழுந்து வீட்டை சுத்தம் செய்து, பூஜையறையில் அழகான வர்ண கோலங்கள் போட்டு பீடம் அமைத்து ஸ்ரீசரஸ்வதி தேவியின் சித்திர படத்தையோ அல்லது விக்ரஹத்தையோ வைத்து மல்லி, சாமந்தி போன்ற பூக்களால் அலங்கரித்து ஐந்து முகங்களுடன் கூடிய குத்துவிளக்கினை ஏற்றி சரஸ்வதி தேவிக்கு ஷோடஸ உபசாரங்களை செய்து, வெள்ளை அல்லது மஞ்சள் பூக்களினால் அர்ச்சனை செய்து, மஞ்சள் நிறத்தில் இனிப்பு வகைகளை செய்து நிவேதனம் செய்ய வேண்டும்.

இந்த பூஜையில் குழந்தைகள் படிக்கும் புத்தகங்கள், எழுத்தாணி, பலகை, சித்திரம் வரைவதற்கு தேவையான பொருட்கள் போன்றவற்றை பூஜை செய்யும் இடத்தில் வைத்து அதற்கும் பூஜை செய்தல் வேண்டும். அன்று தன்னால் முடிந்த அளவிற்கு பலகை, புத்தகங்கள் போன்றவற்றை தானம் அளிப்பது நன்று. சிறு குழந்தைகளுக்கு வஸந்த பஞ்சமி அன்று ஆலயத்தில் "அக்ஷராபிஷேகம்" என்ற நிகழ்ச்சியை நடத்தி, குழந்தைகளுக்கு முதன் முறையாக எழுதுவதற்கு பயிற்சியைத் துவங்குவர். கல்வி நிறுவனங்களில் சிறப்பான முறையில் பூஜைகளை நிர்வகித்து, பத்தாம் வகுப்பு புதிய கல்வியாண்டின் புத்தகங்களை வழங்கி அன்றிலிருந்து துவங்கும் வழக்கமும் உள்ளது.

வட இந்தியாவில் இந்த வஸந்த பஞ்சமியை அறுவடை திருநாளாக கொண்டாடும் வழக்கம் உண்டு. அன்று ஆலயங்களில் சென்று வழிபட்டு மாலை நேரத்தில் "பட்டம் விடுதல்" போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி மக்கள் தங்கள் ஆனந்தத்தை வெளிப்படுத்துவர்.

திருமலையில் பிரம்மோத்ஸவத்தின்போது மூன்றாம் நாள் காலையில் திருமலையப்ப ஸ்வாமி ஹம்ஸ வாகனத்தில் கல்வி கடவுளான சரஸ்வதி தாயார் அலங்காரத்தில் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளிப்பது வழக்கமாக உள்ளது.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 78

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | | 3 | | 4 |
| | | | | | 5 | | | | | 6 | |
| | | 7 | | | | | | | | | |
| | | 8 | | | | | 9 | | | | |
| | | | | | | | | 10 | | | |
| 11 | | | | | | | | | | | |
| | 12 | 13 | | | | | | | | | |
| | 14 | | | | | | | | | | |
| | | 15 | | 16 | | | | 17 | 18 | | |
| | | | | | | | 19 | | | 23 | |
| | 20 | | | | | | | | | | |
| 21 | | | | | | | | | | | 22 |

தொகுப்பு :
திரு. எஸ்,ராஜகுமார்
சென்னை, 7358495655

புதிருக்கு விடை அறிய
38ம் பக்கம்
பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

1. புஷ்ப மண்டபத் தலம்....(5)
7. அமுதக் கலசம் என்னும் பிரத்யேக நைவேத்யம் செய்யப்படும் தலம்.....(8)
11. பெருமாளே நேரில் வந்து வெற்றி வாழ்த்து சொல்வதற்கு சமம்....(8)
13. சுதர்சனருக்கு ஆராதனைகள் ஏற்படுத்திய முனிவர்....(3)
15. கருடனின் மான் போல் சுழலும் பார்வைக்கு ....(4) என்று பெயர்.
19. ஆழ்வார்கள் பதினொறுவரும் மங்களாசாசனம் செய்த தலம்.....(5)
20. இறைவன் பன்றி உருவத்துடன், கருப்பு நிறத்துடன் 100 கரங்களுடன் புவியினைத் தூக்கியதாகக் கூறப் படும் நூல்....(10)
21. திருமால் ஆதிசேஷன் மீது துயில் கொண்ட கோலத்தில் காட்சி அளிக்கும் இடம்.....(8)

## வலமிருந்து இடம்

3. திருப்பாவை ஜீயர் ....(5)
5. அர்ஜுனனுக்கு வில்லினால் ஏற்பட்ட பெயர்....(5)
6. உலகளந்த திருமாலின் பாதத்திற்கு அபிஷேகம் செய்தவர்.....(4)
9. பாற்கடலைக் கடைய மந்திரமலை .....(4) மாறியது.
10. இராமாநுஜருக்கு முதலியாண்டான் ....(6) ஆகத் திகழ்ந்தார்.
19. பரசுராமர் அவதாரத்தின் போது அவரது ஏர்க் கலப்பையின் சக்தியாக இருந்தார்....(7)
22. புண்டரீக மகரிஷிக்கு இஷ்ட தெய்வம்....(4)

## மேலிருந்து கீழ்

1. முப்பெரும் கடவுள் மரம் எங்குள்ளது....(11)
2. நாம் உணவு உண்ணும்போது பெருமாளை நினைத்து உச்சரிக்கப்படும் திருநாமம்.....(7)
4. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருத்தலங்கள்...(8) எனப்படும்.
8. மகாபாரதத்தில் கடைசி நாள் போர் ....(6) யுத்தமாக நடந்தது
14. ஆண்டாள் தன்னை .....(3) குலத்தின் பெண்ணாக வரித்துக்கொண்டாள்

## கீழிருந்து மேல்

12. தென்னிந்தியாவின் காசி.....(5)
16. மகாபாரதப்போரில் பீமன் அசுவத்தாமா கொல்லப்பட்டான் என்று சொன்னது.....(2)யைக் குறிக்கிறது
17. .....(4) மாறி சுக்ராச்சாரியார் மகாபலியின் தானத்தை தடுத்தார்.
18. திருப்பதியில் இரவு நடக்கும் சேவை....(6)
19. வேதத்தில் லட்சுமியைப் போற்றும் பகுதி....(5)
23. நாரதரை எல்லோரும் ....(7) என நினைப்பர்



# ஜோதிட சாஸ்திரம்

# "புதன்"

– முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
திருவல்லிக்கேணி, 9444392595

நவக்கிரகங்களில் சூரியனுக்கு மிக அருகில் வலம் வரும் முதல் கிரகம் புதன். மற்ற கிரகங்களை நாம் வெற்று கண்களால் விண் வெளியில் காண முடியும். ஆனால் இக்கிரகம் சூரியனின் சுற்றுப்பாதையில் நெருங்கி சுற்றும் கிரகமானதால் கண்ணுக்குப் புலப்படுவதில்லை.

பொன் கிடைத்தாலும் புதன் கிடைப்பதில்லை என்பதனை நாம் கேட்டு இருக்கின்றோம். அதன் பொருள் பொன் என்றால் குருவின் நவரத்தினம் பொன் ஆகும், புதனின் நவரத்தினம் மரகத பச்சையாகும். இவ்விரு நவரத்தினங்களில் மரகதம் மிகவும் உடையும் தன்மை கொண்டது. இதனை பொன்னுடன் இணைக்கும் போது தவறி விடுவது உண்டு. எனவே தான் இந்த ஆன்றோர் சொல் வழக்கில் உள்ளது. ஜோதிட ரீதியாக குருஹோரை அமைந்தாலும், புதஹோரை கிடைக்காமல் தடுமாறுவதையும் குறிக்கும். இவ்விரண்டு சுபகிரகங்களின் இணைவு சுபயோக மங்களம் உண்டாகும்.

இன்றைய காலக்கட்டத்தில் மனிதனின் அறிவியற் கூறாய்வுக்கு வித்யாகாரகன் எனும் இந்த புதன் கிரகமே ஆகும். ஒருவர் அறிவாளியா? அல்லது புத்திசாலியா? எனக் கேட்டால் புதன் ஆதிக்கம் பெற்றவர் புத்திசாலியாகவும், குரு ஆதிக்கம் பெற்றவர் அறிவாளியாகவும் திகழ்வர். இங்கு ஒருவரின் ஜாதகத்தில் புதன் கிரகம் வலுவாக இருந்தால் எந்த சூழ்நிலையிலும் தன்னுடைய புத்தியின் கூர்மையால் வெற்றியினை அடைவார்கள்.

புதன் ஒரு இரட்டை நிலை (அலி) கிரகம் ஆகும். ஒருவர் ஜாதகத்தில் புதன் நீச்சம் பெற்று, நீச்சபங்க நிலையில் குருவின் வீடான மீன ராசியில் இருந்தால் கல்வியில் தடை ஏற்பட்டு திரவியம் தேட கடல் கடந்து சென்று செல்வம் சேர்ப்பார்கள். அதே நேரத்தில் மேலாண்மை மேலோங்கி இருப்பதையும் அறியலாம். மிகச் சிறந்த தொழிலதிபதிகள், அரசியல் தத்துவ ஞானிகள், இசை ஞானிகள், பேச்சாற்றல், நகைச்சுவை, பின்னணிப் பாடகர்கள், கல்வி நிறுவனங்கள் நடத்துபவர்கள் போன்றோர்களின் ஜாதக கட்டங்களை ஆய்வு செய்கையில் கண்டதாகும்.

உறவுகளில் தாய்மாமன் இடத்தை குறிக்கும் கிரகமாக விளங்கும் புதன் கிரகம் ஒருவருக்கு சுபத்துவம் அடைந்த அதாவது ராசிக்கு 7ஆம் இடம் சம்பந்தப்படும் நிலையில் உறவு பெண் திருமண பந்தம் ஏற்படுத்தும்.

அதே நேரத்தில் ரவிக்கோ அல்லது லக்னத்திற்கோ ஆறாம் இடத்தின் காரகம் பெற்றோ அல்லது புதன் கிரகத்திற்கு இடம் கொடுத்தவரின் ராசியினை பொருத்து ரண/ருண கோளாறுகள் ஏற்படுத்தும். உதாரணமாக, புதன் கிரகம் கடக ராசியில் இருக்க கடக ராசியின் சந்திரன் விருச்சிக ராசியில் நீசம் பெற்றால், ஜாதகருக்கு நரம்பு, வாத நாடியினை பாதிக்கும் நிலை உருவாகும். இது அந்தந்த ஜாதகரின் கோட்சாரம், தசாப்புத்தியினைக் கொண்டு துல்லிய

மாக அறியலாம். தசாபுத்தி, வருட அமைப்பில் புதனுக்கு சுக்கிரன் (20), சனி(19), ராகு(18). அடுத்த நிலையாக 17 வருடங்கள் மஹரிஷி பராசரரால் வழங்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு சுபவலுப்பெற்று புதன் தசை நடக்கும் காலங்களில் மருத்துவம், அரசியல், விஞ்ஞானம் போன்றவற்றில் வெற்றியினை அள்ளித்தரும் கிரகம் இந்த புதன் கிரகம் ஆகும்.

## புதன் கிரகத்தின் பண்புகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிறம் | : பச்சை | சமித்து | : நாயுருவி | தான்யம் | : பாசிபயறு |
| ரத்னம் | : மரகதம் | அதிதேவதை | : விஷ்ணு | நாடி | : வாதநாடி |
| கோத்ரம் | : ஆத்ரேய | குணம் | : தாமஸ | வாகனம் | : குதிரை, நரி |
| ஸ்வரம் | : “ரீ” | உலோகம் | : பித்தளை | வஸ்திரம் | : பச்சைப்பட்டு |
| புஷ்பம் | : வெண்காந்தன் | ஜாதி(குலம்) | : வைசியன் | சுவை | : அறுசுவை, உவர்ப்பு |
| காரகன் | : வித்யாகாரகன் | நீச்சம் | : மீனம் | ஆட்சி | : மிதுனம், கன்னி |
| உச்சம் | : கன்னி | மூல திரிகோணம் | : கன்னி | சத்ரு | : சந்திரன் |
| மித்ரு | : சூரியன் | உறவு | : தாய்மாமன் | நட்பு | : செவ்வாய், குரு, சனி |
| அவயவம் | : கழுத்து | தூபதீபம் | : கற்பூரம் | பார்வை | : ஏழாம் பார்வை, சுபம். |

காலசுழற்சி : ஒரு மாத காலம் ஒரு ராசிக்கு    நட்சத்திரங்கள் :ஆயில்யம், கேட்டை, ரேவதி.

க்ஷேத்ரம் : திருவெண்காடு, மதுரை, ஆழ்வார் திருநகரி

**காயத்ரி மந்திரம்**

**கஜத்வஜாய வித்மஹே சுக ஹஸ்தாய தீமஹி**
**தந்நோ புத: ப்ரசோதயாத்**

பரிகாரம் :
ஸ்ரீராம பாராயணம் ஸ்ரீஆஞ்சநேயர் முன்னிலையில்
பொது பாராயணம் : சுந்தர காண்டம், 35வது சர்க்கம்,
நிவேதனம் : வெண்பொங்கல்,

## திசை மற்றும் புத்தி காலங்களில் செய்ய வேண்டிய பாராயணங்கள்

| புத்தி | காண்டம் | ஸர்க்கம் | நிவேதனம் |
|---|---|---|---|
| புதன் | பால | 29 | திராட்சை |
| கேது | சுந்தர | 14 | தேங்காய் |
| சுக்ரன் | ஆரண்ய | 9,10 | கற்கண்டு |
| சூரியன் | யுத்த | 94 | கரும்பு |
| சந்திரன் | அயோத்யா | 117 | பால் |
| செவ்வாய் | சுந்தர | 29 | சர்க்கரைப்பொங்கல் |
| ராகு | யுத்த | 28 | தேன் |
| குரு | அயோத்யா | 74 | வாழைப்பழம் |
| சனி | யுத்த | 114 | நாவல் பழம் |



தொடரும்....

குன்று இருக்கும் இடங்கள் எல்லாம் குமரன் அருள் வீசும் இடங்கள். முருகப் பெருமான் அருளாட்சி செய்யும் எத்தனையோ மலைதலங்களை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். அந்த வரிசையில் இடம் பெற்றுள்ள “தோரணமலை” முழுக்க முழுக்க வித்தியாசமானது. மிகுந்த தனித்துவம் கொண்டது.



தென்காசியில் இருந்து கடையம் செல்லும் வழித்தடத்தில் இத்தலம் உள்ளது. நெல்லையில் இருந்தும் மிக எளிதாக இத்தலத்துக்குச் செல்ல முடியும். இந்த தோரணமலையின் உச்சியில் முருகன் குடி கொண்டிருக்கிறான்.

தமிழ் வாழ வழி வகுத்த குறுமுனியான அகத்தியர், மருத்துவ உலகமே வியந்து பார்க்கும் தேரையர் சித்தர் இருவரும் பல நூறு ஆண்டுகளாக வழிபட்ட பெருமையும், மகிமையும் இந்த முருகப் பெருமானுக்கு உண்டு. தமிழ்நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான முருகத் தலங்களில் அறுபடை வீடுகள் உட்பட எந்த ஒரு தலத்துக்கும் இல்லாத மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பாக இது கருதப்படுகிறது.



உலகத்தை சமப்படுத்த தென்பகுதியில் உள்ள பொதிகை மலைக்கு செல் என்று சிவபெருமான் அகத்தியருக்கு உத்தரவிட்டு, அவர் வந்த கதை உங்களுக்கு தெரிந்ததுதான். அகத்திய முனிவர் பொதிகைக்கு வந்து கொண்டிருந்தபோது கடையம் அருகே உள்ள தோரணமலையைப் பார்த்து வியந்தார். யானை வடிவத்தில் இருந்த அந்த மலை வாரணமலை என்றழைத்தார். அதுதான் மருவி தோரணமலை ஆகிவிட்டது.



தோரணமலை அவருக்கு மிகவும் பிடித்துபோனது. அதற்கு மிக முக்கிய காரணம் அந்த மலை அவருக்கு மனதை குளிரச் செய்து அமைதியைத் தந்தது. எனவே அந்த மலையில் சிறிது காலம் தங்கிச் செல்லலாம் என்று அகத்தியர் மலை உச்சிக்குச் சென்றார். தோரணமலையில் பச்சை பசேலென விளைந்து கிடந்த சுமார் 4 ஆயிரம் மூலிகை செடி வகைகளை கண்ட அகத்தியர், அந்த மூலிகைகள் என்னென்ன நோய் தீர்க்கும் என்பதை கண்டுபிடித்தார்.

அகத்தியரின் மருத்துவ ஆய்வுக்கு வித்திடப்பட்ட இடம் இந்தத் தோரணமலை என்பது குறிப்பிடத் தக்கது. அகத்தியரின் சீடராக வந்து சேர்ந்த தேரையரும் மருத்துவத்தில் நிறைய புதுமைகளைச் செய்தார். அவர்கள் இருவராலும் சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோரணமலை மிகப்பெரும் மருத்துவ தொழிற்சாலை போல செயல்பட்டது.

# அகத்தியர் பூஜித்த தோரணமலை முருகன்

திரு.அறந்தாங்கி சங்கர், சென்னை,
9444160161










சில ஆண்டுகளுக்குப் பிறகு அகத்தியர் தோரணமலையில் இருந்து பொதிகை மலைக்குச் சென்று விட்டார். அவரது சீடர் தேரையரோ, அந்த தோரண மலையின் ஒரு பகுதியில் ஜீவசமாதி ஆகிப்போனார். இதனால் மற்ற மகரிஷிகள், முனிவர்கள், சித்தர்களும் தோரண மலையில் இருந்து இடம்பெயர்ந்தனர். மிகவும் சிறப்பாக வழிபடப்பட்ட முருகனும் கால ஓட்டத்தில் அருகில் இருந்த சுனைக்குள் போகும் நிலை ஏற்பட்டுவிட்டது. கால ஓட்டத்திற்குப் பின்னர் தோரண மலை அருகில் உள்ள முத்துமாலைபுரம் என்ற ஊரைச் சேர்ந்த நா.பெருமாள் என்பவர் கனவில் தோன்றி,“நான் தோரணமலை உச்சியில் உள்ள சுனைக்குள் கிடக்கிறேன். என்னை வெளியில் எடுத்து வைத்து வணங்குங்கள்” என்றார். மறுநாள் விடிந்ததும் பெருமாள் ஆட்களை அழைத்து கொண்டு மலை உச்சிக்கு சென்றார். சுனையில் உள்ள தண்ணீரை இறைத்து வெளியேற்றினார்கள். சொன்னபடி தோரணமலை முருகன் அங்கே இருந்தார்.

அந்தச் சிலையை எடுத்து மலை அடிவார குகையில் வைத்து வழிபட்டனர். இன்றும் அந்தச் சிலையே தோரணமலை சன்னிதானத்தில் மூலவராக உள்ளார். பக்தர்கள் வசதிக்காக தோரணமலை உச்சிக்குச் செல்ல சுமார் 1000 படிகள் கொண்ட படியை ஏற்படுத்தினர். சுனைகளையும் மேம்படுத்தினர்.

நீங்கள் முதல் படியில் காலை எடுத்து வைத்தால் போதும், அதன்பிறகு அப்பன் முருகன் நம்மை மலை உச்சிவரை வரவழைப்பார். அதிலும் மலையில் உள்ள சுனைத்தீர்த்தம் ஏதாவது ஒன்றில் சற்று நீராடினால் போதும், மலை ஏறி வந்த அலுப்பு தெரியவே தெரியாது. புனித நீராடி விட்டு முருகனை நெருங்கும் போது நிச்சயம் இரட்டிப்பு பலன்களைப் பெறலாம்.

## குகையில் முருகன் தரிசனம்

தோரண மலையில் குகையில் முருகப் பெருமான் தரிசனம் தருகிறார். இந்த குகை இயற்கையில் கிழக்கு நோக்கி அமைந்திருப்பது தனிச்சிறப்பு. இந்த முருகன் திருச்செந்தூர் முருகனை நோக்கிய வண்ணம் இருப்பதால் இவரை வழிபட்டால் திருச்செந்தூர் முருகனை வணங்கிய புண்ணியம் கிடைக்கும். இதனால் முருகனுக்கு மாலை அணிந்து விரதம் இருக்கும் பக்தர்கள் தோரண மலைக்கும் வந்து செல்கிறார்கள்.

## வழிபாட்டு நேரம் :

சிறந்த பிரார்த்தனை தலமாக விளங்கும் தோரணமலை முருகன் கோயிலில் தமிழ்மாத கடைசி வெள்ளிக்கிழமை தோறும் உச்சிக்கால பூஜையின் போது (11 மணி முதல் 1.30 மணி வரை) சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மற்றும் அன்னதானமும் நடக்கின்றன. திருமணம், மகப்பேறு ஆகியவற்றுக்காகவும், நோய் குணமாகவும், சொத்துத் தகராறு, குடும்பத்தகராறு நீங்கவும் தோரணமலை முருகனை வழிபட்டு வருகின்றனர். மருத்துவப்படிப்பு, விரும்பிய வேலை, தொழில் அமையவும் உயர்பதவி கிடைக்கவும் அருள்பாலிக்கிறான் முருகன். செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் கார்த்திகை, விசாகம் ஆகிய நட்சத்திரங்களும் முருகனை வழிபட உகந்ததாகும். மலை அடிவாரத்தில் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை கோயில் நடை திறந்திருக்கும். ஒருமுறை தோரணமலை மீதில் அருளாட்சி செய்யும் நம் அப்பன் முருகனை தரிசித்து வருவோம்.





# சபரி

அலசுவோம்...... அறிவோம்.... ஆதிகாவிய நாயகர்களை...

## இச்சுவையும் பெற்றாள் அச்சுவையும் பெற்றாள்

– திரு. எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685

ஸ்ரீமத்ராமாயணம் என்பதே ஜீவாத்மாவைப் பரமாத்மாவுடன் ஆசாரியன் சேர்த்து வைப்பதை உருவகமாக விளக்க வந்த உன்னதமான காவியமாகும். சீதாதேவியாகிய ஆத்மாவை ஸ்ரீராமபிரானாகிய பரமாத்மாவுடன் ஸ்ரீஆஞ்சநேயர் எனப்படும் ஆசாரியர் இணைத்து வைத்ததாக ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் சிலாகித்துக் கூறுவதுண்டு.

இதேபோன்று இன்னொரு விசேஷ சரித்திரமும் ஸ்ரீமத்ராமாயணத்தில் பொதிந்திருக்கின்றது.

மகத்தான இந்தக்காவியம் முழுவதும் ஸ்ரீசீதாதேவியைப் பற்றிப் பேசப்படுகின்றது. ஆனால், அந்த சீதாதேவியைப் போன்றே ஆசாரியர்களின் அருளினால் பரம்பொருளுடன் இணைந்த இன்னொரு கதாபாத்திரத்தைப் பற்றி மிகச் சுருக்கமாகவே பேசப்படுகிறது. மிகச்சிறந்த ஆசாரிய பக்திக்கும், பரமாத்மாவின் மேல் கொண்ட பாசத்திற்கும் உதாரணமாகக் காலம் காலமாக அக்கதாபாத்திரத்தை எல்லோரும் குறிப்பிடுகின்றனர். ஆசாரிய பக்தியால் கிடைக்கும் மாபெரும் பேற்றையும் விளக்குகின்ற அந்த உன்னதமான கதாபாத்திரத்தின் பெயர் சபரி.

சீதாதேவியைத் தேடிச் செல்லும் ஸ்ரீராமபிரானும் லட்சுமணரும் கபந்தன் என்ற விசித்திரமான அரக்கனைக் கண்டனர். ஸ்ரீராமபிரானின் திருக்கரங்களால் சாபவிமோசனம் பெற்ற அந்தக் கபந்தனின் மூலம் சபரி, சுக்ரீவன் ஆகிய இருவரின் இருப்பிடங்களைப் பற்றியும் அவர்களுக்குத் தெரியவருகிறது.

பம்பாநதி தீரத்தில் உள்ள ரிச்யமூக பர்வதத்தின் மேற்குத் திசையில் தவம் புரிந்துவந்த மதங்கர் என்ற முனிவருக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் நீண்ட காலம் பணிவிடை புரிந்து வந்தவள் சபரி. சாதாரண குலத்தில் பிறந்தவளாக இருந்தாலும், தன் குருமார்களுக்குச் செய்த பணிவிடையின் மகத்து வத்தால் ஆத்ம ஞானம் அடைந்தவள். "இவ்வுலக வாழ்வு நிலையற்றது; முக்தர்கள் சென்று அனுபவிக்கும் வைகுந்த வாழ்வே நிலையான பேரின்பம் தருவது!" என்பதை அவள் உணர்ந்திருந்தாள்.

சபரியின் குருமார்கள் ஒரு நன்னாளில் யோகசக்தியால் தங்களுடைய பூதவுடலைப் பூப்போல உதிர்த்து திவ்ய சரீரங்களை அடைந்து மேலுலகம் நோக்கிக் கிளம்பினர். அவ்வாறு கிளம்பும் நேரத்தில் அவர்கள் சபரியை ஆசீர்வதித்து, "நீ இங்கேயே தொடர்ந்து தங்கியிருந்து ஸ்ரீராமபிரான் இங்கு எழுந்தருளும்போது அவரை தரிசித்து உபசரித்துவிட்டுப் புண்ணிய உலகத்தை அடைவாயாக!" என்று கூறிவிட்டுச் சென்றனர். அவ்வாறே சபரியும் ஸ்ரீராமபிரானின் வருகைக்காகக் காத்திருக்கலானாள்.

கடுந்தவத்திற்குப் பிறகு சபரியின் இருப்பிடம் தேடி ஸ்ரீராமலட்சுமணர்கள் இருவரும் வந்தனர். அவர்களைக் கண்டு

அகம் மகிழ்ந்த சபரி தான் பிறவிப் பயனை அடைந்த தாகப் பூரிப்பு அடைந்தாள். தான் சேகரித்து வைத்திருந்த சுவைமிகுந்த கனிவகைகளை அவர்களுக்குச் சமர்ப்பித் ததுடன் மதங்கர் உள்ளிட்ட முனிவர்கள் அருந்தவம் புரிந்த புனித மான வனப்பிரதேசங்களை அவர்களிரு வருக்கும் காண் பித்தாள்.

"அம்மா, சபரீ, உன்னாலன்றோ இன்று நாங்கள் இந்தப் புனித பூமியை தரிசிக்க நேர்ந்தது. இனி நீ உனது விருப்பப்படியே இந்த பூதவுடலை நீத்து வைகுந்த பதவியை அடைவாயாக!" என்று ஸ்ரீராமபிரான் அனுமதியளித்தருளினார்.

ஸ்ரீராமலட்சுமணர்கள் இருவரும் பார்த்துக் கொண் டிருக்க, யோகசக்தியால் தன்னுடைய பூத உடலைத் துறந்து திவ்யமான சரீரத்துடன் புண்ணிய லோகமான வைகுந்தத்தை நோக்கிக் கிளம்பினாள் சபரி.

இந்நிகழ்ச்சியை ஸ்ரீவேதாந்ததேசிகர் தாம் இயற்றிய ரகுவீரகத்யத்தில் இவ்வாறு விவரிக்கிறார்.

*"அவந்த்ய மஹிம முநிஜன பஜன முஷித ஹ்ருதய கலுஷ சபரீ மோக்ஷ ஸாக்ஷிபூத!"*

"சாதுக்களாகிய முனிவர்களை அண்டியதால் தன்னுடைய உள்ளத்தின் களகங்கள் யாவும் நீங்கப் பெற்ற சபரி முக்தி அடைந்த நிகழ்வுக்குச் சாட்சியாய் இருந்தவனே!" என்று ஸ்ரீராமபிரானைப் பார்த்து ஸ்ரீவேதாந்ததேசிகர் கூறுவதில் ஒரு விசேஷம் இருக்கிறது.



## ஸ்ரீராமரை போற்றும் தியாகராஜர்



சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீதியாக பிரம்மம் என்று அன்பாக அழைக்கப்படும் தியாகராஜ சுவாமிகள் திருமாலின் முக்கிய அவதாரமான ஸ்ரீராமரைப் போற்றிய பாடல்கள் பல பல. *"ஜகதானந்த காரகா ஜெய ஜானகி பிராண நாயக!"* என்று தொடங்கும் கீர்த்தனை பஞ்ச ரத்ன கீர்த்தனையில் ஒன்றாக சிறப்புப் பெற்றது ஆகும். *"மந்துகேகு ஸ்ரீஹனுமந்து..."* என்ற கீர்த்த னையில் "மருந்திற்காக சஞ்சீவினி மலையைக் கொண்டு வரச்சென்ற ஹனுமனை போன்று, தன்னையும் தங்கள் அருகிலேயே வைத்திருங்கள் ஸ்வாமி" என்று மனமுருகி ஸ்ரீராமபிரானிடம் வேண்டுகிறார்.



தியாகராஜ சுவாமிக்கு தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் "புஷ்ய பகுள பஞ்சமி" அன்று சங்கீத வித்துவான்கள் எல்லோரும் ஒன்று கூடி தியாக பிரம்மம் இயற்றி பாடியருளிய கீர்த்தனையில் பஞ்சரத்ன கீர்த்தனைகளை ஒரே சமயத்தில் ஒரே குரலில் பாடி தியாக பிரம்மமான தியாக ராஜரை கௌரவிக்கும் வகையில் இசையஞ்சலி செலுத்துவது கண் கொள்ளா காட்சியாகும்.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

**சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.**

### யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கடிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

### பெரியோர்கள் செய்ய வேண்டியன...

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

### நிபந்தனைகள் :

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

**படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :**
பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி-517 507.



**குழந்தைகளே எழுதுங்கள்!**
**கோவிந்தன் திருவருளை பெறுங்கள்!!**

இவ்வுலகில், ஒருவர் தம்முடைய பொருள் ஒன்றை மற்றொருவருக்குக் கொடுக்க, மூன்றாவது மனிதர் அதற்குச் சாட்சியாக இருப்பதே வழக்கத்தில் உள்ளது. ஆனால், சபரியின் விஷயத்திலோ, அவளுக்கு மோட்சத்தை அளித்த பரம்பொருளாகிய ஸ்ரீராமபிரானே அந்நிகழ்வுக்குச் சாட்சியாகவும் அமைந்தது எத்தனை ஆச்சரியமான விஷயம்.

சபரியின் சரித்திரத்தில் இன்னோர் ஆச்சரியமும் இருக்கின்றது.


ஸ்ரீரங்கம் பெரியபெருமாளின் திவ்யமான அர்ச்சாவதாரத் திருமேனியை அனுபவித்த நம் தொண்டரடிப் பொடியாழ்வார், **"இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!"** என்று பாடி னார். ஸ்ரீராமபிரான் காட்டுக்கு வருவதற்கு முன்பாக முக்தியடைந்த சபரியின் ஆசாரியபுருஷர்களுக்கு வைகுந்த இன்பமாகிய அச்சுவையை அனுபவிக்கும் பேறு மட்டுமே கிடைத்தது. ஆனால், ஆசாரியர்களுக்குத் தொண்டு புரிதலாகிய பாகவத கைங்கர்யம் புரிந்த சபரியோ இப்பூவுலகில் ஸ்ரீராமபிரானின் தரிசனம் என்னும் இச்சுவையையும் அனுபவித்தாள். அந்த ஸ்ரீராமபிரான் மூலமாகவே அனுக்கிரகிக்கப் பெற்று அவரையே சாட்சியாக வைத்து முக்தியடைந்ததன் மூலம், அச்சுவையாகிய வைகுந்த உலகத்தின் பேரின்பத்தை அனுபவிக்கும் நல்வாய்ப்பினையும் பெற்றுப் பிறவிப் பயனை அடைந்தாள்.

தமிழ் மொழியில், "மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது!" என்று ஒரு பழமொழி உண்டு.

அது போலவே, ஸ்ரீமத்ராமாயணத்தில் மிகக் குறுகிய கால அவகாசத்திற்குள் வந்து செல்கின்ற புனிதவதியாகிய சபரி என்கின்ற கதாபாத்திரத்தின் கீர்த்தியும் மிகப் பெரியதாகவே இருக்கின்றது.

தொடர்ந்து அலசுவோம்...

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்



### ஜனவரி 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### பிப்ரவரி 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | | | |

### மார்ச் 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### ஜனவரி 2023

01 ஆங்கில வருட பிறப்பு
02 வைகுண்ட ஏகாதசி
03 ஸ்வாமி புஷ்கரணி தீர்த்த முக்கோட்டி
07-13 ஆண்டாள் நீராட்டோத்ஸவம்
14 போகி, 15 மகர சங்கராந்தி-பொங்கல்
16 மாட்டுப்பொங்கல், ஆண்டாள் பரிணயோத்ஸவம்
21 ஸ்ரீபுரந்தரதாசர் ஆராதனை
26 இந்தியக் குடியரசு தினம்
28 இரத சப்தமி

### பிப்ரவரி 2023

01 பீஷ்ம ஏகாதசி
ஜன.31-5 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம்
05 ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி
07 திருமழிசையாழ்வார் திருநட்சத்திரம்
11-19 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
11-20 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
18 மஹாசிவராத்ரி
28-மார்.08 தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### மார்ச் 2023

03 குலசேகராழ்வார் திருநட்சத்திரம்
03-07 திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்
07 ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி
20-28 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
22 தெலுங்கு வருட பிறப்பு (ஸ்ரீசோபக்ருத் நாமம்)
24 ஸ்ரீமத்ஸ்ய ஜெயந்தி
30 ஸ்ரீராமநவமி
31-ஏப்.08 ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



## ஏப்ரல் 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## மே 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## ஜூன் 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### ஏப்ரல் 2023

03-05 திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம்
03-05 திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி தெப்போத்ஸவம்
06 தும்புரு தீர்த்த முக்கோட்டி
14 தமிழ் வருட பிறப்பு, டாக்டர் அம்பேத்கர் ஜெயந்தி
22 பரசுராம ஜெயந்தி
23 அக்ஷய திருதியை
25 இராமாநுஜ ஜெயந்தி, சங்கர ஜெயந்தி
26 இராம ஜெயந்தி
29-மே1 திருமலை ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம்

### மே 2023

02-05 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்
04 ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, தரிகொண்ட வெங்கமாம்ப ஜெயந்தி,
04-12 நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
05 ஸ்ரீகூர்ம ஜெயந்தி, 06 அன்னமய்யா ஜெயந்தி
13-21 கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம், 14 ஹனுமத் ஜெயந்தி
16 திருப்பதி ஸ்ரீகங்கை அம்மன் சித்திரைத் திருவிழா
31-ஜூன்08 ரிஷிகேஷ்/நாராயணவனம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
26-ஜூன்03திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### ஜூன் 2023

மே30-03 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்
மே31-08 அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
02-06 திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
02 ஸ்ரீநம்மாழ்வார் சாத்துமுறை
24-26 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார மஹோத்ஸவம்
29 சயன ஏகாதசி சாதுர்மாதம் ஆரம்பம், பெரியாழ்வார் திருநட்சத்திரம்

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

### ஜூலை 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

### ஆகஸ்ட் 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### செப்டம்பர் 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |



### ஜூலை 2023

ஜூன்30–2 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
03 ஆஷாட பௌர்ணமி,வியாச ஜெயந்தி, குருபௌர்ணமி
07–09 திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம்
12–15 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
17 திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்
22 ஆண்டாள் திருவாடிப்பூரம்
30 துளசி மஹத்தியம்

### ஆகஸ்ட் 2023

15 இந்திய சுதந்திர தினம், சக்கரத்தாழ்வார் திருநட்சத்திரம்
20 நாகசதுர்த்தி, 21 கருட பஞ்சமி, 22 கல்கி ஜெயந்தி
25 மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா நினைவு தினம்
25 வரலக்ஷ்மி விரதம்
26–29 திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
28–30 கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம்
30 ஸ்ரீவிகனச ஜெயந்தி
31 ஹயக்ரீவ ஜெயந்தி, காயத்ரி ஜபம்

### செப்டம்பர் 2023

07 ஸ்ரீகிருஷ்ண ஜென்மாஷ்டமி, கோகுலாஷ்டமி
17 ஸ்ரீபலராம ஜெயந்தி,ஸ்ரீவராஹ ஜெயந்தி
17–26 திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
18 விநாயக சதுர்த்தி
22 திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை
26 ஸ்ரீவாமன ஜெயந்தி
26–29 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம்
28 அனந்த பத்மநாப ஸ்வாமி விரதம்

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்



### அக்டோபர் 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### நவம்பர் 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### டிசம்பர் 2023

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

### அக்டோபர் 2023

02 காந்தி ஜெயந்தி
14-23 திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
15-23 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் நவராத்ரி உத்ஸவம்
19 திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை
22 துர்காஷ்டமி 23 விஜய தசமி
23 பொய்கைழ்வார் திருநட்சத்திரம்
24 பூதத்தாழ்வார் திருநட்சத்திரம்
25 பேயாழ்வார் திருநட்சத்திரம்

### நவம்பர் 2023

10-18 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்
12 நரக சதுர்தசி, தீபாவளி அமாவாசை
13 ஸ்ரீகேதார கௌரி விரதம்
17 நாகுல சதுர்த்தி
18 திருச்சானூரில் பஞ்சமி தீர்த்தம்
19 திருமலையப்ப ஸ்வாமி, திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்பயாகம்
24 கைசிக துவாதசி

### டிசம்பர் 2023

10 ஸ்ரீதன்வந்தரி ஜெயந்தி
17 மார்கழி மாதம் ஆரம்பம்
22-26 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம்
23 வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீகீதா ஜெயந்தி
24 ஸ்வாமி புஷ்கரணி தீர்த்த முக்கோட்டி
24 ஸ்ரீஅனுமத் விரதம்
26 ஸ்ரீதத்த ஜெயந்தி
28 திருமலையப்ப ஸ்வாமி பிரணயகலஹோத்ஸவம்

மகாலட்சுமி அருகில் அமர்ந்திருக்க, பாற்கடலின்மேல் ஆதிசேஷனை பஞ்சணையாகக் கொண்டு சயன கோலத்தில் வீற்றிருக்கும் அந்த திருமாலை தரிசிக்க இரு கண்கள் போதாது. அவன் திருவடிகளை பற்றிக்கொண்டு அந்த வைகுண்ட லோகத்தை அடைவதுதான் ஒவ்வொரு பக்தனின் வாழ்க்கை லட்சியமாகும். இந்த லட்சியத்தை அடைய வைகுண்ட ஏகாதசி என்ற உகந்த நாள் ஒரு மிகப்பெரிய அவகாசமாக கருதப்படுகிறது. இந்த நாட்காட்டியில் பல ஆன்மீக சிறப்புமிக்க நாட்கள் உண்டு. மோட்சப்பாதையில் கடந்து செல்ல இந்த வைகுண்ட ஏகாதசி ஒரு மிகவும் அற்புதமான நாளாகும். ஒரு வருடத்தில் வரும் 24 ஏகாதசிகளில் தனுர் மாதத்தில் (மார்கழி) சுக்ல பட்சத்தில் அமையும் இந்த வைகுண்ட ஏகாதசியை முக்கோடி ஏகாதசி என்றும் அழைப்பர்.

புராணத்தின்படி பிரம்மன் தலைமையில் தேவலோகத்து பிரஜைகள் ஒரு நாள் வைகுண்டத்திற்குச் சென்று கொடிய இராவணன் செய்யும் அரக்கத்தனமான செயல்களில் இருந்து தம்மை காக்கும்படி திருமாலை வேண்டினார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி மகாவிஷ்ணு கோடிக்கணக்கான தேவலோக வாசிகள் முன் தோன்றி அவர்களை காப்பதாக உத்தரவாதம் அளித்தார். கருணையே வடிவான அந்த கடவுள் தன் பக்தர்களை காக்க அபயக்கரம் நீட்டுவார் என்பதற்கு இதுவே அத்தாட்சி. இதுவே வைகுண்ட ஏகாதசி என பிரபலமானது.

இந்த நாளை சிறப்பிக்க இன்னொரு உதாரணமும் புராணத்தில் உள்ளது. இரட்டை அரக்கர்களான மதுகைடபர்களை அந்த பகவான் வதம் செய்யும் போது அவர்கள் தெய்வீக உருவம் கொண்டு அவர் முன் தோன்றினார்கள். இந்த நாளில் ஏகாதசி பூஜை செய்து எவர் ஒருவர் மகாவிஷ்ணுவை வடக்கு வாயில் வழியாக தரிசிக்கின்றனரோ அவர்களுக்கு மோட்சம் அளிக்கும்படி அவரை பிரார்த்தித்தனர். தயா வடிவான அந்த திருமாலும் உடனே “ததாஸ்து” என்று கூறி தனது சம்மதத்தை தெரிவித்தார். அன்றிலிருந்து மறுபிறப்பை தவிர்த்து மோட்சத்தை பெறுவதற்கு ஒவ்வொரு பக்தனுக்கும் இந்த தினம் ஒரு பொற்காலமாகத் திகழ்கிறது.



சாதாரணமாகவே வைகுண்ட ஏகாதசி என்றாலே எல்லோருக்கும் நினைவிற்கு வருவது உபவாசம் இருப்பது மற்றும் நித்திரையைத்










திரு. அத்தி ரங்கராஜன்,
திருப்பதி, 98490 99246

தவிர்ப்பது. உலகமெங்கும் உள்ள இந்து மக்கள் இந்த நாளை உபவாசம் இருந்து பகவானை மோட்ச வரம் கோரி வேண்டுவதை நாம் காண்போம். இதன் உண்மையான அர்த்தம் உணவை தவிர்த்து பசியுடன் வாடுவது அல்ல. உலக சுகபோகங்களை தவிர்த்து, அற்பவிஷயங்களைத்தாண்டி ஹரி நாமத்தை ஜபித்தபடி இந்த நாளை கழிப்பதன் மூலம் ஒவ்வொருவரும் தனக்குள் இருக்கும் தெய்வத்துடன் தொடர்பு கொள்வதே வைகுண்ட ஏகாதசி நாளின் உள்நோக்கமாகும்.

மனிதர்களே அல்ல. தேவர்களும், அசுரர்களும் கூட இந்த புண்ணியம் வாய்ந்த நாளை கடைபிடித்து இருக்கின்றனர். பாற்கடலை கடைவதற்கு முன் தேவர் களும், அசுரர்களும் வைகுண்ட ஏகாதசி விரதம் இருந்த பிறகு "க்ஷீர சாகர மதனம்" செய்ததனால் அந்த பாற்கடலில் இருந்து மஹாலக்ஷ்மி தோன்றி அவர்களுக்கு அருள் பாலித்தார்.

ஏகாதசி தேவி தோன்றிய நாளும் இதுவே என்று புராணம் கூறுகிறது. கிருத யுகத்தில் முரன் என்ற அரக்கன் தேவர்களையும் பொதுமக்களையும் துன்புறுத்தி வந்தான். பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று மகாவிஷ்ணு ஒரு நாள் அவன் மீது போர் தொடுத்தார். ஆயிரம் வருடங்களுக்கு போர் நீடித்தும் சக்தி வாய்ந்த அந்த அரக்கனை அழிக்க இயல வில்லை. சோர்வடைந்த நிலையில் திருமால் ஒரு குகைக்குள் சென்று உறங்க நினைத்தார்.

இதை அறிந்த அந்த முராசுரன் திருமால் விடுதி கொண்ட அந்த குகையை நோக்கி படையெடுத்தான். சயனித்திருந்த பகவானின் உடலில் இருந்து அப்பொழுது வெளியான ஒரு ஒளிக்கீற்று ஒரு இளம் பெண் உருவம் கொண்டது. பல சக்தி வாய்ந்த ஆயுதங்களை தாங்கிய அந்த பெண் முராசுரனை போரில் வென்றாள். அரக்கன் மாண்டதை கண்ட மகாவிஷ்ணு அந்த பெண்ணுக்கு வேண்டிய வரம் அளிப்பதாகக் கூறினார்.

ஏகாதசி அன்று தோன்றியதால் "ஏகாதசி தேவி" என்று நாமத்தை கொண்ட அந்த இளம்பெண் இந்த நாளில் பகவானை பிரார்த்திக்கும் அனைவருக்கும் விஷ்ணு லோகத்தில் இடம் வேண்டும் என்ற வரத்தை கேட்டாள். அன்றிலிருந்து இந்த சிறந்த நாளில் திருமாலை வழிபடுவோர்க்கு மோட்சம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

திருமலையில் வைகுண்ட ஏகாதசி என்பது ஒரு மிகச் சிறந்த உற்சவமாகும். வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு திருவத்யயனோத்ஸவம் 23 நாட்கள் நடைபெறும். வைகுண்ட ஏகாதசிக்கு முன்புவரும் அமாவாசை அன்றிரவு தோமாலை சேவையாகி திருமலையப்ப ஸ்வாமி உபய நாச்சிமார்களுடன் புறப்பட்டு திருமாமணி மண்டபத்தில் வீற்றிருப்பார். ஜீயர் ஸ்வாமிகளும் அத்யாபகர்களும் திவ்ய பிரபந்த இயற்பா தொடங்குவார்கள். தினமும் பிரபந்தங்கள் ஓதப்படும். இராப்பத்து பகல்பத்து என ஓதப்பட்டு வரும்.இறுதியாக 24 ஆம் நாள் தண்ணீர் அமுது உத்ஸவம் நடைபெறும்.

வைகுண்ட ஏகாதசி நாள் திருமலையை அடையும் பக்தர்கள் அனைவருக்கும் கண்ணுக்கு

விருந்தையும் நெஞ்சுக்கு நிம்மதியையும் அளிக்கும் ஒரு பொன்னாள். இந்த நாளை பத்து நாள் உற்சவமாகக் கொண்டாட வேண்டும் என்று 2020 ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் முடிவு செய்தனர். அன்றிலிருந்து வைகுண்ட வாசல் பத்து நாட்களுக்கு பக்தர்களுக்காக திறந்து வைக்கப்படுகிறது. வைகுண்ட ஏகாதசியன்று தங்கத்தேரில் திருமலையப்ப ஸ்வாமி பவனி வருவது, துவாதசி அன்று சக்ர ஸ்நானம் நடைபெறுவதும் இங்கு விசேஷம்.



வருடத்திற்கு ஒரு முறை நடக்கும் அறிய நிகழ்ச்சியானதால் இந்த நாளில் திருமலை வந்து சேர கூட்டம் அலை மோதும். இந்த வடக்கு நுழைவுவாயிலில் நுழைய இதற்கு முன்னால் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒரே நாளில் போட்டி போடுவர். பலர் அந்த வாயிலின் வழியாகச் சென்று அந்த ஏழுமலையானை தரிசனம் செய்து, அந்த கண் கொள்ளா காட்சியைக் கண்டு மகிழ்ந்தாலும், சேவிக்க முடியாதோர் ஏமாற்றம் அடைவது தவிர்க்க முடி யாத ஒரு உண்மை. இன்று இதை பத்து நாள் உற்சவமாக மாற்றிய பிறகு லட்சக்கணக்கான பக்தர்கள் உத்தர துவாரத்தில் நுழைந்து, மனதார தரிசனம் செய்து மோட்சம் கோரும் இந்த அறிய வாய்ப்பினை பெறுகிறார்கள்.



உலக பந்தங்களை அறுத்து, பூர்வஜென்ம பாவங்களைப் போக்கி மோட்சமளிக்கும் இந்த வைகுண்ட வாயில் வழியாக நுழைவதே ஒரு அலாதியான தெய்வீக அனுபவம். கருவறையைச் சுற்றியிருக்கும் இந்த பிரகா ரத்தை இந்த நாளில் மிகவும் அறிய, வாசமிகு, வண்ண மிகு மலர்களைக் கொண்டு அலங்கரிப்பார்கள். சொர்க்கவாசல் என்ற பெயருக்கேற்றாற்போல் இந்த வாயிலில் நுழைந்தால் அந்த வைகுண்டத்திற் குள்ளேயே காலடி எடுத்து வைத்து நடப்பது போன்ற ஒரு நெகிழ்வு ஏற்படும்.

இந்த நாளில் திருமலையை அடைந்து அவன் பாதம் பற்றும் பக்தர்களுக்கும், திருமாலை துதித்து ஏகாதசி விரதத்தினை அனுசரிப்போர்களுக்கும் அந்த ஏழுமலையப்பனின் அருள் பூரணமாகக் கிடைக்கும்.

# அருளிச் செயல்களில் கூரத்தாழ்வானின் நிர்வாஹம்

– திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்
அம்பத்தூர், 9952929685

"பெருமாள் கோயில்" என்று அழைக்கப்படும் காஞ்சிபுரத்திற்கு வட மேற்கே 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள "கூரம்" என்கிற ஊரில் சௌம்ய வருடம் தை மாதம் ஹஸ்த நட்சத்திரத்தில் வியாழக்கிழமை பிறந்தார். ஒரு ஸ்ரீ வைஷ்ணவன் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து காட்டியவர் கூரத்தாழ்வான். சிறுவயதிலேயே, வேதம் இதிஹாஸ புராணங்கள், திவ்ய பிரபந்தங்கள் இவை அனைத்தையும் கற்றுத்தேர்ந்தார். "ஸ்ரீ வத்ஸாங்க" என்ற பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். திருமாலின் திருக்கல்யாண குணங்களில் நம்மாழ்வாரை போல உரக்கத்திலே ஆழ்ந்து இருந்ததால் இவரை இராமாநுஜர் "ஆழ்வான்" என்று அழைத்தார். இவர் அவதரித்தது கூரத்தில் என்பதால் "கூரத்தாழ்வான்" என்ற பெயர் ஏற்பட்டது.

ஆழ்வானின் மனைவியின் பெயர் ஆண்டாள். ஆழ்வானைக் காட்டிலும் இவருக்கு சிறப்பு அதிகம். இந்த தம்பதியருக்கு ஸ்ரீரங்கம் நம் பெருமாள் கிருபையால் பராசரபட்டர், வேதவியாச பட்டர் என இரு குமாரர்கள் பிறந்தனர்.



சோழ அரசனின் சபையில் "ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள்" எனக் கூறியதால் தன் கண்களை இழந்தார். இராமாநுஜர் தர்சனத்திற்காக தன் தர்சனத்தை இழந்தவர் கூரத்தாழ்வான்.

திருமாலிருஞ்சோலையில் எம்பெருமானுடைய குணங்களை நினைத்து நெஞ்சுருகி "ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம், அதிமானுஷ ஸ்தவம், ஸு௨ந்தரபாஹு௨ஸ்தவம், வரதராஜஸ்தவம், ஸ்ரீஸ்தவம் என ஐந்து ஸ்தவங்களை இயற்றினார். கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, குலச்செருக்கு இல்லாத கூரத்தாழ்வானை திருவரங்கத்தமுதனார் தன் இராமாநுஜ நூற்றந்தாதியில், ***"வஞ்சமுக் குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடிய பின்"*** என்று போற்றுகிறார்.

கூரத்தாழ்வான், இரு குமாரர்களுக்கும் இராமாநுஜருடைய சீடரான எம்பார்தான் ஆசார்யனாக இருந்தார். மேலும் பட்டருக்கு ஆழ்வானே ஆசாரியராக இருந்து திருவாய் மொழியின் அர்த்தங்களை எவ்வாறு கற்பித்தார் எனப் பார்ப்போம்.

திருவாய் மொழியில் (5–3) – "மாசறு சோதி" என்ற பாசுரத்தை ராஜேந்திர சோழன் என்னும் இடத்தில் உபந்யாசம் செய்து கொண்டிருந்தார் கூரத்தாழ்வன். அதில் 7ஆம் பாசுரத்தில் உள்ள ***"தலையில் வணங்கவுமாங் கொலோ? தையலார் முன்பே"*** என்பதற்கு அர்த்தத்தை சொல்லிக்கொண்டு இருந்தார். அப்போது "ஆமருவி நிரை மேய்த்தான் நம்பியார்" என்ற 100 வயது பெரியவர் தமிழ் அகப் பொருள் மரபுகளை நன்கு அறிந்திருந்தவர், "ஆழ்வார் தலை மகள் தலைவனைத் தலையில் வணங்குவாளோ?" என்று கேட்டார். அதற்கு ஆழ்வான் "ஸ்ரீ ராமாயணத்தில் சீதை அனுமனிடம் செய்தி சொல்லி அனுப்பும் போது எனக்காக அவரைத் தலையால் வணங்கு என்று கூறுகிறாள். இதன் மூலம் தலைவி தலையால் வணங்குவது என்பது உண்டு என்று விளக்கினார். இதைக் கேட்டு அப்பெரியவர் பெருமகிழ்ச்சி அடைந்தார். மேலும், திருவாய்மொழி 1–2–10வது பாசுரத்தை பட்டருக்கு விளக்கும்போது ***"எண் பெருக்கு அந்நலத்து ஒண்பொருள் ஈறு இல வண்புகழ் நாரணன் திண்கழல்சேரே"*** என்ற பாசுரத்தில் வரும்

நாம் வாழ வேண்டிய வழி முறையை 1000 வருடங்களுக்கு முன்னே வாழ்ந்து காட்டிய மஹான் ஸ்ரீ கூரத்தாழ்வன். அவருடைய கொள்கைகளை நாம் கடை பிடித்து வாழ்வோம் என உறுதி கொள்வோம்.



- மனித நேயம், கருணை, நேர்மை ஆகியவற்றைக் கடைப்பிடிப்போம்.
- ஜகதாசாரியரான இராமாநுஜர் திருவடிகளே உய்ய ஒரே வழி என்று இருப்போம்.
- யாரையும் மனத்தாலோ, சொல்லாலோ, உடலாலோ புண் படுத்தாமல் இருப்போம்.
- நமக்குத் தீங்கு நினைத்தவரிடமிருந்து விலகி வாழ்வோம். இயன்றால் நன்மை செய்வோம்.
- ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்று உணர்ந்து வாழ்வோம்.
- இறை அடியார்களுக்கு அன்ன தானம் செய்வோம்.
- பொறுமையைக் கடைப்பிடிப்போம்.
- பிறப்பாலும், செல்வத்தாலும், கல்வியாலும் உயர்ந்தவன் நான் என்ற இறுமாப்பு அடையாமல் பணிவுடன் இருப்போம்.
- முன்னோர்கள் செய்ததைச் செய்வோம் செய்யாதன செய்யோம்.
- திருமாலின் திருக்கல்யாண குணங்களை எப்பொழுதும் சிந்தித்து அதில் ஈடுபடுவோம்.

எல்லார்க்கும் இறைவனான நாராயணனது உறுதியான திருவடிகளையே பற்ற வேண்டும் என்கிற திருமந்திரத்தின் அர்த்தத்தை விளக்கினார். ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ம்ப்ரதாயத்தில் திருமந்திரத்தை உபதேசிப்பவர் தான் நமக்கு ஆசாரியர். எனவே பட்டருக்கு அவர் தந்தையே ஆசாரியன் ஆகினார். எனவேதான் பட்டர் ஸஹஸ்ர நாமத்தின் விளக்க உரை செய்யும் போது தன்னுடைய ஆசார்யர்களின் பெருமையைக் கூறும் முதல் சுலோகத்தில் எம்பாரையும் தகப்பனாரையும் தொழுகிறேன் என்று அருளிச் செய்தார்.

ஒருநாள் திருவாய்மொழி (8–10–3) *''உறுமோ பாவியேனுக்கு''* என்கிற பாசுரத்தை பட்டருக்கு சொல்லும்போது அதைக் கேட்ட பட்டர் ஒன்றுக் கொன்று முரணாக "சிறுமை" மற்றும் "பெருமை" என்கிற இரண்டு குணங்களும் ஒருவரிடத்தில் எப்படி பொருந்தும்? என வினவினார். உடனே ஆழ்வான், உடல் சிறுத்து, ஞானத்தில் உயர்ந்து உள்ள" சிரியாச் சான்" மற்றும் "அருளாளப் பெருமாள் எம்பெருமானார்" போன்றவர்களை சிறுமாமனிசர் என்று கூறுவதில் தப்பில்லையே! உணவு, நீர் முதலியவைகளை உட்கொண்டாலும் எம்பெருமானிடத்தில் ஈடுபடுவதில் பக்தியில் ஆழ்ந்து இருத்தல் பரமபதத்தில் உள்ள நித்ய சூரிகளை போல பரம பக்தியுடன் இருப்பதால் இவர்களையே ஆழ்வார் "சிறுமாமனிசர்'' என்று கூறியுள்ளார் என்றார் ஆழ்வான். அதை கேட்ட பட்டரும் "தகுந்ததே" என்று ஒப்புக்கொண்டார்.

தாம் முதலில் மோக்ஷம் சென்று பின்பு வரும் தம் ஆசாரியரை வரவேற்கும் எண்ணம் கொண்டு ரெங்க நாதரிடம் தனக்கு மோக்ஷம் கேட்டார். அவரும் இவர் எண்ணத்தை அறிந்து "உமக்கும், உம்முடைய திருநாமம் சொல்லும் அனைவருக்கும், உம்முடைய ஸம்பந்தம் பெற்ற அனைவருக்கும் மோக்ஷம் என்று நம் பெருமான் வரம் தந்துள்ளார். ஆகையால் எனக்கும் மோக்ஷம் கிடைப்பது உறுதியாகிறது என்று எம்பெருமானார் மகிழ்ச்சி அடைந்தார். தன் ஆசாரியருக்கு மோட்சம் கிடைக்க வழி வகுத்தார்.

ஏற்கனவே தான் திருத்திப் பணிகொண்ட பிள்ளையாழ்வான் மடியில் தன் தலையை வைத்துக்கொண்டு குமாரர்களின் மடியில் தன் திருவடிகளையும் வைத்துக் கொண்டு ஆழ்வார், ஆளவந்தார், உடையவர் திருவடிகளைச் சிந்தை செய்து கொண்டே பரமபதத்தை அடைந்தார். ஆழ்வானின் பிரிவை ஆற்ற முடியாமல் முற்றும் துறந்து பற்றற்ற எம்பெருமானாரே அழுது அரற்றினார் என்றால் ஆழ்வாரின் பெருமை எத்தகையது என்று சொல்லவும் வேண்டுமா?

மார்கழி மாதத்தை மிகச் சிறந்த மாதமாக நாம் கருதுகின்றோம். கண்ணன் பகவத்கீதையில் மார்கழி மாதத்தின் பெருமையை *''மாஸானாம் மார்க சீர்ஷோ'ஹம்''* என்று சொல்லியிருக்கின்றான்.

மார்கழி மாதம் அதிகாலை வழிபாட்டுக்கு என்று ஏற்படுத்தப்பட்ட மாதம். தேவர்களின் பூஜை நேரம் என்று சொல்வார்கள். தேவர்களின் அதிகாலை நேரம் என்றும் சொல்வார்கள்.

திருமலை அப்பனுக்கும், மார்கழி மாதத்துக்கும் என்ன தொடர்பு? ஆண்டாளுக்கும் அவள் பாடிய திருப்பாவைக்கும் திருமலைக்கும் என்ன தொடர்பு? என்பதை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஆண்டாள் முதலில் பாடிய பிரபந்தம் திருப்பாவை. அது மார்கழி மாதத்தின் பெயரோடு தொடங்குகின்றது.


*மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;*
*நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!*
*சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!*
*கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,*
*ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,*
*கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்*
*நாராயணனே, நமக்கே பறைதருவான்,*
*பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.*

மார்கழி மாதத்தை திருப்பாவை மாதம் என்றும் சொல்வார்கள். அந்த மாதத்தில் ஆண்டாள் பாடிய திருப்பாவையைப் பாடி வீதி வலம் வருவது பல ஊர்களிலும் நடக்கும்.

திருப்பாவை காலையில் பாடப்படும் திருப்பள்ளி எழுச்சிதான். திருப்பள்ளி எழுச்சியை வடமொழியில் சுப்ரபாதம் என்பார்கள். திருமலையில் பாடப்படும் சுப்ரபாதம் மிக விசேஷம்.

சகஸ்ர நாமம் என்றால் விஷ்ணு சஹஸ்ரநாமம் நினைவுக்கு வருவதைப் போல, சுப்ரபாதம் என்றால் ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம் தான் முதலில் நினைவுக்கு வரும். அப்படிப்பட்ட திருமலையில் மார்கழி மாதம் மட்டும் தமிழ் சுப்ரபாதமான திருப்பள்ளி எழுச்சி, திருப்பாவை முப்பது நாளும் பாடுவார்கள்.

ஆண்டாள் திருப்பாவையைப் பாடியது வேங்கடவனுக்கே என்றொரு கருத்தும் உண்டு. காரணம் திருப்பாவைக்கு உய்யக்கொண்டார் அருளிய தனியனில் உள்ள கருத்து.



திருப்பாவையில் ஆண்டாள் கண்ணனைப் பாடியிருந்தாலும் அந்தக் கண்ணன்தான் திருமலையப்பன். இந்தத் தொடர்பு நமக்கு வியப்பைத் தரும். கண்ணனையும் திருமலையப்பனையும் இணைத்து காண்போமே.

1. கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தவன். திருமலை அப்பன் வேங்கடகிரி மீது வேதாந்த விளக்காய் நிற்பவன்.

2. கண்ணனுக்கு கோவிந்த பட்டாபிஷேகம் நடந்து கோவிந்த நாமம் கிடைத்த பிறகு மற்ற பெயர் எல்லாம் சிறு பெயர் ஆயிற்று. இதை ஆண்டாள் ***"குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா, உன்னை சிறு பேர் அழைத்தனவும் சீறி அருளாதே"*** என்று பாடுகின்றாள். அந்த கோவிந்த நாமம்தான் திருமலையில் ஒவ்வொருவர் வாயிலும் கோவிந்தா! கோவிந்தா!! என்று எதிரொலிக்கிறது.

3. கண்ணனை இடையன் என்று சொல்வார்கள். திருமலையப்பன் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் நின்றவன் என்பதால் அவனும் இடையன்தான். (விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு)

4. திரௌபதியின் கடன் தாங்க முடியவில்லையே "ருணம் ப்ரவிருத்தாம்" என்ற வருத்தத்தோடு கண்ணன் வைகுந்தம் சென்றான் என்று ஸ்ரீ பாகவதம் கூறும். அதைப் போலவே குபேரனுடைய கடனை அடைக்க முடியாமல் திருமலையில் பெருமாள் நின்று கொண்டிருக்கிறார் என்று புராண வரலாறுகள் கூறும்.

5. ஏழு என்ற எண் ஏழுமலையைக் குறிப்பது. அதைப்போலவே 7 என்ற எண் சப்தாஹம் எனும் ஸ்ரீ பாகவதம் 7 நாள் சொல்வதைக் குறிப்பது. பாகவதம் கண்ணன் கதைதானே.

6. ஒரு மலையை(கோவர்த்தனம்) ஏழு நாட்கள் தூக்கிக்கொண்டு கண்ணன் நின்றான். கலியுகத்தில் ஏழுமலையும் சேர்ந்து கண்ணனாகிய திருவேங்கடவனை தூக்கிக் கொண்டு நிற்கிறது.

7. திருப்பாவையில் கண்ணனை நினைத்து பாடினாலும் எல்லா அவதாரங்களையும் பாடுகிறாள் ஆண்டாள். அதைப்போலவே திருமலையப்பனை நரசிம்ம மூர்த்தியாக, வாமனனாக, கண்ணனாக, ராமனாக என்று சகல அவதாரங்களையும் இணைத்து ஆழ்வார்கள் சொல்லுகின்றார்கள்.

8. ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையை அணிந்து கொண்டவன் கண்ணன்.












## தியான சுலோகங்கள்

தூபாம் ச விவிதாம் ஸ்தாந்
கந்தாட்யாம் ச லேபனம் |
தீபாந் உபகாரம் ச
யச்சாபீஷ்டமது ஆத்மன: ||

தூபம், தீபம், அர்ச்சனம், நீராஜனம், போஜ்யாசனம், அலங்கார ஆசனம் போன்ற ஷோடஸ பூஜைகளை செய்வதால் மஹாவிஷ்ணு சந்தோஷம் அடைகிறார். எல்லா காரியங்களிலும் ஜயம் உண்டாகும்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



அந்த கண்ணனைப் போலவே சூடிக்கொடுத்த ஆண்டாள் மாலையை பிரம்மோற்சவத்தில் கருட சேவை அன்று அணிந்து கொண்டு காட்சி தருகின்றான் திருமலையப்பன். நம்மாழ்வாரின் ஒரு பாசுரம் இது.

*குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன்,*
*அன்று ஞாலம் அளந்த பிரான், பரன்*
*சென்று சேர் திருவேங்கட மா மலை,*
*ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே.*

*''குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்''* என்று நம்மாழ்வார் பாடும் செய்தியை, *''குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி''* என்று ஆண்டாள் மங்களாசாசனம் செய்கின்றார்.

*''சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே*
*தொல்பாவை,*
*பாடி அருளவல்ல பல் வளையாய் -*
*நாடி நீ*
*வேங்கடவற்கு என்னை விதி என்ற*
*இம்மாற்றம்*
*நாம் கடவா வண்ணமே நல்கு''*

*''வேங்கடவற்கு என்னை விதி''* என்கிற சங்கல்பம் தான் ஆண்டாள் திருப்பாவை. இதை நாச்சியார் திருமொழியிலும் அவள் அழுத்தமாகப் பாடி பதிவு செய்திருக்கின்றாள்.

*''குளிர் அருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம் பாடி''* என்றும் *''வேங்கடத்து செங்கண்மால் சேவடிக்கீழ் அடி வீழ்ச்சி விண்ணப்பம்''* என்றும் *''தெண்ணீர் பாய் வேங்கடத்து என் திருமால்''* என்றும் பலப் பலவாறு திருவேங்கட வனைப் போற்றி, தான் அவனிடம் கொண்ட காதலை வெளிப்படுத்து கிறாள்.

*''அன்று ஞாலம் அளந்த பிரான்''* என்பதை, திருப்பாவையில் ஆண்டாள் மூன்று முறை பாடுகிறாள். *''ஓங்கி உலகளந்த உத்தமன்''* என்றும், *''அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமான்''* என்றும், *''அன்று இவ்வுலகம் அளந்தாய்''* என்றும் பாடுகின்றாள்.

### வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 78க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ப் | ப | தி | ர் | 2 ஜ | னு | மா | 3 ரா | | 4 தி |
| ரு | ன் | ப | டீ | ண் | 5 கா | னா | மா | ம் | ர | 6 பி | வ் |
| க் | லி | 7 நா | ச் | சி | யா | ர் | கோ | வி | ல் | | ய |
| கா | ல் | 8 க | | க | தா | த் | 9 ம | | வை | ர் | தே |
| ட் | நெ | ரு | ம் | ட | ண் | த | ரி | 10 தி | சே | ர | ச |
| 11 க | ரு | ட | த | ரி | ச | ன | ம் | க | த | கா | ங் |
| ரை | 12 தி | 13 வி | க | சை | | ன் | த | டா | ந் | க் | க |
| ய | 14 ஆ | யூ | | னை | | | க் | ண் | கா | க | ள் |
| ப் | ய | 15 க | ல் | 16 யா | ணி | | சூ | 17 வ | 18 ஏ | ல | |
| ப | ர் | ன | ச | ர் | த | சு | 19 ஸ்ரீ | | ங் | 23 க | ம் |
| ன் | 20 தை | த் | த | ரி | ய | ஆ | ர | ண் | ய | ம் | |
| 21 தி | ரு | ப் | பா | ற் | க | ட | ல் | ல் | மா | ரு | 22 தி |



"பரன் சென்று சேர் திருவேங்கட மாமலை" என்று நம்மாழ்வார் பாடியதை, "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று ஆண்டாள் பரத்துவத்தைப் பாடுகின்றார். "குல தொல் அடியேன் உன் பாதம் கூடும் ஆறு கூறாயே" என்று நம்மாழ்வார் திருமலையப்பனிடம் வைக்கும் வேண்டுதலை, ஆண்டாளும் கண்ணனிடம் வைக்கிறாள்". "ஏழேழு பிறவிக்கும் உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்று ஆண்டாள் பாடுகின்றாள்.

திருமங்கையாழ்வார் "சிந்தாமணியே திருவேங்கடம் மேய எந்தாய்" என்று பாடுவதை ஆண்டாள் "மணி வண்ணன் நென்னலே வாய் நேர்ந் தான்" என்றும் "மாலே மணிவண்ணா" என்றும் திருப்பாவையில் காட்டுகின்றாள்.

"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்" என்று நம்மாழ்வார் பாடிய விஷயத்தை, "குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது" என்று திருப்பாவையில் கைங்கர்யமே சேதனர்களுக்கு பிரதானம் என்பதை காட்டுவதோடு பறை என்ற சொல்லால் திருப்பாவை முழுக்க கைங்கர்யத்தைப் பிரார்த்திக்கிறாள். எண்ணிப் பார்க்கின்றபோது திருப்பாவையில் சொல்லப்பட்ட செய்திகள் மற்ற ஆழ்வார்கள் திருவேங்கடவனைப் பாடிய செய்திகளோடு அற்புதமாக பொருந்துவதால் திருப்பாவை வேங்கடவனுக்கு என்று பாடி இருக்கலாம் என்று தோன்றுகிறது.

கண்ணனையே கை பிடிக்க உறுதி கொண்டவள் ஆண்டாள். "மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று உறுதியாக இருந்த அவளுக்கு கல்யாண மஹோத்சவம் மற்ற திவ்ய தேசங்களில் பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று சிறப்புற நடந்தாலும் ஆண்டாளின் ஆசையை உடனே தீர்த்து வைத்தவர் திருமலையப்பன். திருமலையில் தை மாதம் 1ஆம் தேதி ஆண்டாளுக்கு மாலையிட்டு (கோதா பரிணயம்) அவள் ஆசையை நிறைவேற்றி வைக்கிறான்.

இந்த மார்கழி மாதத்தில் திருப்பாவையைப் படிப்போம். ஆண்டாளை நினைப்போம். வேங்கடவனைத் துதிப்போம்.

**பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி**
**புவனகிரி**

பாசுரம் படிப்போம்....

## மங்கள சுலோகங்கள்

பீதாம்பரபரிதான ஸுரகல்யாண நிதான ।
நாராயண நாராயண நாராயண நாராயண
ஜய கோபாலஹரே ॥

**மஞ்சளாடை அணிந்தவனே!**
**தேவர்களின் நலனை நடத்துபவனே!**
**நாராயணனே! கோபால! ஹரி! (உனக்கு) வெற்றி!**



### புராண வரலாறு

ருக்மாங்கதன் என்கிற அரசன் இத்தலத்தில் வாழ்ந்து, தான் அமைத்த நந்தவனத்திலிருந்து புஷ்பங்களைக் கொய்து தினமும், இந்த எம்பெருமானுக்கு அர்ச்சித்து மகிழ்ந்தான். ஒரு சமயம், மன்னன் அவ்வாறு புஷ்பங்களைப் பறிப்பதற்கு முன்பாகவே தேவர்கள் அங்கு வந்து புஷ்பங்களைப் பறித்து, எம்பெருமானை வணங்கினார்கள்.

ருக்மாங்கதனின் உறுதியான பக்தியால், இவ்விடத்துக்கு வந்து தேவர்கள், வானுலகம் திரும்ப இயலவில்லை. குற்றத்தை உணர்ந்த தேவர்கள், ருக்மாங்கதனை மன்னிக்குமாறு வேண்ட, அரசன், தான் அதுவரை பெற்றிருந்த ஏகாதசி விரதத்தின் பலனை அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் திரும்பவும் தங்கள் உலகத்துக்குத் திரும்பச் செய்தான். இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரே நாழிகைக்குள் நடைபெற்றதால், இந்தத்தலம் “திருக்கடித்தானம்” என்று அழைக்கப் படுவதாகச் சொல்வர்.

பஞ்சபாண்டவர்களில் சகாதேவனால் அமைக்கப்பட்ட திவ்யதேசம் இது என்பர்.

### சிறப்புகள்

இங்கு ஒரு நாழிகை தவம் செய்தாலும் ஏராளமான பலன் என்கின்றனர். அதனாலும் “திருக்கடித்தானம்” இது என்பர்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | அத்புத நாராயணன், அமிர்த நாராயணன் (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| தாயார் | : | கற்பகவல்லி |
| விமாநம் | : | புண்யகோடி விமாநம் |
| தீர்த்தம் | : | பூமித்தீர்த்தம். |
| ப்ரத்யக்ஷம் | : | தேவர்கள், ருக்மாங்கதன். |
| ஆகமம் | : | நம்பூதிரிகளின் பூஜாக்ரமம். |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார். |

### விசேஷம்

இந்த எம்பெருமானின் மேன்மையைக் கண்டு துதிக்க மண்ணுலக மக்களும், எளிமையைக் கண்டு துதிக்க விண்ணுலகத்தோரும் வருவதாக ஆழ்வார் புகழ்கிறார். நிறைவுப் பாசுரத்தில் “பாலோடு அமுது அன்ன ஆயிரத்துப் பத்து” என்பதற்கு ஸ்ரீ ஆளவந்தார், பாலாகக் கூறப்படுபவர் எம்பெருமான் என்றும், அமுதாகச் சொல்லப்படுவது இத்திவ்ய தேசத்துத் திருவாய்மொழி என்றும் வ்யாக்யானம் செய்வாராம். ஸ்ரீந்ருஸிம்ஹன், ஸ்ரீக்ருஷ்ணன் ஸந்நிதிகள் உள்ளன.

### த்யானச்லோகம்

*ஸ்ரீமத் கடிஸ்தானபுரேம்ருதத்புத ஸ்ரீநாராயண:*
*கல்பல தாஸ கோவ்யாத் ।*
*ஸ்ரீபூமி தீர்த்தாந்தி புண்யகோடி*
*மவைமாநிகோ, ருக்மயாங்கதாப்த: ॥*



**பாசுரம்**

*"அற்புதன் நாராயணன் அரிவாமனன்*
*நிற்பது மேவியிருப்பதென் னெஞ்சகம்*
*நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர்*
*கற்பகச் சோலை திருக்கடித்தானமே."*

– நம்மாழ்வார்

*"காண விரும்பும் என்கண், கையும் தொழ விரும்பும்*
*பூணவிரும்பும் என்றன் புன்தலைதான் - வாணன்*
*திருக்கு அடித்தான், நத்தான், திகிரியான், தண்டான்*
*திருக்கடித்தானத் தானைச் சேர்ந்து"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*671. ஓம் ப்ரஹ்மவித் நம:*

வேதஸ்வரூபியே.

*ஓம் ஜிக்ஞாஸாயை நம:*

ஆத்ம ஞானத்தைப் பெற விரும்புவோர்க்கு சாதனமாக இருப்பவளே.

*672. ஓம் ப்ராஹ்மண: நம:*

தத்தாத்ரேய அவதாரப் புருஷனே.

*ஓம் மநீஷாயை நம:*

மனதை அடக்கி நல்ல சிந்தனை செய்யும் சக்தியை அளிப்பவளே.

*673. ஓம் ப்ரஹ்மீ நம:*

ப்ரமாண, ப்ரமேயங்களின் திருவடிவே.

*ஓம் ஸமதர்ஸிந்யை நம:*

குற்றம் உள்ளவன், இல்லாதவன் என்கிற வேற்றுமை இல்லாது யாவரும் எளிதில் ஆச்ரயிக்கும்படி இருப்பவளே.

*674. ஓம் ப்ரஹ்மஜ்ஞ: நம:*

வேதங்களின் அர்த்தங்களை நன்கு அறிந்தவனே.

*ஓம் ஸஹஸ்ர ஸக்த்யை நம:*

பெருமாளுடன் கூடவே எங்கும் செல்ல வல்லவளே.

*675. ஓம் ப்ராஹ்மணப்ரிய: நம:*

வேதம் வல்லாருக்குப் பிரியனே.

*ஓம் ஆவ்ருத்யை நம:*

எல்லாவிடத்திலும் நிறைந்து நிற்பவளே.

*676. ஓம் மஹாக்ரம: நம:*

ஜீவன்கள் மேன்மை அடையும்படி ஞானம், பக்தி இவைகளைப் படிப்படியாகக் காட்டியவனே.

*ஓம் ஸுஸ்திராயை நம:*

தவறு செய்பவர்களிடமும் பரிவு காட்டுபவளே.

*677. ஓம் மஹாகர்மா: நம:*

சிறந்த செயல்களை உடையவனே.

*ஓம் ஸ்ரேயஸாம் நிதயே நம:*

நற்பலன்களின் குறைவற்ற இருப்பிடமே.

*678. ஓம் மஹாதேஜா: நம:*

அவித்யை என்கிற இருட்டைப் போக்கும் பெரும் சுடரே.

*ஓம் ரோஹிண்யை நம:*

சராசரங்களை வைகுண்டத்துக்கு ஏற்றி விடுபவளே.

*679. ஓம் மஹோரக: நம:*

மனஸ்ஸில் பிரவேசிப்பவனே.

*ஓம் ரேவத்யை நம:*

இருள் தருமாஞாலத்தை அழிக்க வல்லவளே.

*680. ஓம் மஹாக்ரது: நம:*

பெரிய யாகங்களால் ஆராதிக்கப் படுபவனே.

*ஓம் சந்த்ரஸோதர்யை நம:*

சந்தரனின் சகோதரியே.

*ஸ்ரீமதே கற்பக வல்லி நாயிகா ஸமதே ஸ்ரீஅத்புத நாராயண பரப்ரஹ்மணே நம:*



இவ்வாலயம் திருவல்லவாழ் திவ்ய தேசத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது

திவ்ய தேச வைபவம் வளரும்...

**பெரிய நம்பிகள் வாழித்திருநாமம் உரை தொடர்ச்சி...**

(எம்பெருமானார் முனிவர்க்கு இதமுரைத்தான்) இராமாநுசருக்கு திருக்கோட்டியூர் நம்பிகள் அளித்த பெயர் எம்பெருமானார். முனிவராகிறார் – மனனம் செய்பவர். நம் ஸம்ப்ரதாயத்தை வளர்க்க மனனம் செய்தவர். திருவரங்கப்பெருமாள் அரையர் இராமாநுசருக்கு அளித்த பெயர் லக்ஷ்மண முனி. அந்த முனிவரான எம்பெருமானார்க்கு இதம் உரைத்தவர் பெரிய நம்பி. வடமொழியில் “ஹிதம்” என்ற சொல் தமிழில் இதமாயிற்று. இதமாவது நன்மை. அந்த நன்மைக்குச்சேர இவரே ஆளவந்தார் நியமனத்தால் இராமாநுசரைத் திருவரங்கத்துக்கு அழைத்து வந்தார். ஆளவந்தார் காலத்துக்குப் பிறகு ஆளவந்தாருடைய மற்ற சீடர்களாலே வேண்டப் பட்டு பெரியநம்பிகளே இராமாநுசருக்கு திருவிலச் சினை செய்து அழைத்து வருவதாக காஞ்சி புறப்பட்டார்.

தேவப்பெருமாளின் நியமனப்படியாக பெரியநம்பியைக் காண இராமாநுசர் திருவரங்கம் நோக்கிப் புறப்பட டார். இருவரும் மதுராந்தகத் தில் சந்தித்தனர். அங்கு இராமா நுசருக்கு பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து, “மந்த்ரரத்னம் ப்ரதம்'' என்று தனியனில் அருளியபடியே குருபரம்பரை முன்னாக த்வய மந்தரத்தை வலது செவியிலே உபதேசித்து “பெருமாள் தம் திருவடிகளை பரதாழ்வான் திருமுடியிலே வைத்துக் காட்டுக்கு எழுந்தருளினாப் போலே, ஆளவந்தார் உமக்குத் தம் திருவடிகளை என் தலையிலே வைத்துத் திருநாட்டுக்குச் சென்றார்” என்று அருளிய பெரியநம்பி வார்த்தையை ராமாநுஜ திவ்ய சரிதையில் பிள்ளை லோகம் சீயர் காட்டியுள்ளார். இதுபற்றியே “இதமுரைத்தான்” என்று சொன்ன படி. “மதுராந்தகம் கோயிலிலே, மகிழமரத்தின் நிழலுடைய அவ்விடத்தையே பரமபதமாக நினைத்து பெரியநம்பியை ராமாநுஜர் ஆசார்யராக அடைந்தார்” என்று வடுக நம்பி அருளிய ராமாநுஜ வைபவம் கூறும்.

எம்பெருமானார் உலகம் வாழ வந்தவர் என்பதை அவருடைய சிறுவயதிலேயே தாங்கள் கண்டுவிட்டதைச் சொல்லும் வகையில் “வித்தாகும் காய் பிஞ்சிலே தெரியும்'' (வார்த்தாமாலை.441) என்பர் பெரியநம்பி. ஆறு மாத காலம் இராமாநுசர் திருமாளிகை மேல் பாதியிலே குடும்பத்தோடு இருந்து ராமாநுஜருக்கு திவ்ய ப்ரபந்தங்களையும், தர்சன விஷய ரஹஸ்ய விசேஷங்களையும் அருளினார்







# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.4 நவம்பர் 2022 விடைகள்

1. இராமாநுஜர்.
2. பரிமளவல்லி.
3. பொய்கையாழ்வார்.
4. பத்மசரோவரம்.
5. பிரம்மோத்ஸவம்.
6. திருவேங்கட கலம்பகம்.
7. பராசர பட்டர்.
8. மயூரவல்லி தாயார்.
9. ஆதிசங்கரர்.
10. வேதாந்த தேசிகர்.
11. வெள்ளிக் கிழமை.
12. 2021.
13. மதுரவல்லி.
14. அன்னமய்யா.
15. சீதை.




**போட்டி எண்.3ற்கான சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் ஏ.பி. கோகுல் கார்த்திக், மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்.
2. செல்வி எம்.ஆர். ஸ்ரீலோசினி, மருங்கூர், குமரி மாவட்டம்.
3. செல்வி தர்ஷிணி வெங்கடேசன், வல்லம், தஞ்சாவூர் மாவட்டம்.

என்று குருபரம்பராப்ரபாவம் கூறும். பகவத் ராமாநுஜ அவயவ ப்ரபாவத்தில் “கண்ட: பூர்ணோ மஹாம்ஸ்ததா” என்கிறபடியே மஹா பூர்ணர் என்னும் பெரியநம்பிகள் இராமாநுசரின் திருக்கழுத்தாக அருளியது காண்க.

(எழில் பெரியநம்பி சரண் இனிதூழி வாழியே) எழிலாவது அழகு. பெரிய நம்பிக்கு அழகாவது அவயவ அழகு. நித்ய ஸூரியான குமுதர் அம்சமாகையாலே திருமேனி அழகுடையவர். நம்பி – பூர்ணர்? ஸ்வரூபத்தில் பூர்ணர். ஸ்வரூபமாவது ஞான பக்தி வைராக்யங்களால் நிறைந்து இருப்பது. இவருடைய ஞான பக்திகள் அளவற்றதாயிராமல் கரையுள் அடங்கிய ஆறுபோல அளவுபட்டு இருக்கையாலே தெளிவாயிருக்கும் என்பர்.



இதுபற்றியே “ஸ்ரீ பராங்குச தாஸாய நம:” என்று குருபரம்பரையில் அநுஸந்திக்கப்படுகிறது காணலாம். எம்பெருமானாரும் *“கமலாபதி.... பூர்ணாய மஹதே நம:”* என்று அருளிய தனியனில் “ஸ்ரீமந் நாராயணனுடைய கல்யாண குணங்களாகிற அமுதத்தைப் பருகுகையால் எப்போதும் விருப்பம் நிறைவேறப் பெற்றவராயிருக்கும் பெரிய நம்பிகளுக்கு வணக்கம்” என்று அருளியதால் பெரிய நம்பிகள் திருவடி பெருமை சொன்னபடி. வேதாந்த தேசிகரும் யதிராஜ ஸப்ததியில் (9) *“தயாநிக்நம்... மநோரத:”* என்பதற்குச்சேர “ஒன்றியொன்றி உலகம் படைத்த விஷ்ணுவின் மநோரதம் எவராலே நிறைவேற்றப்பட்டதோ, கருணை நிரம்பியவரும் எம்பெருமானாருடைய ஆசார்யருமான பெரிய நம்பிகளை வணங்குகிறேன்” என்றதனால் நம்பி திருவடிகள் பெருமை சொன்னபடி.

பெரியநம்பிகள் திருவடிகளைப் பற்றினவர்கள் அறுவர். அவர்களாகிறார் – ராமாநுஜர், மலைகுனிய நின்றார், ஆரீய ஸ்ரீசடகோபதாஸர், அணியரங்கத்து அமுதனார், திருவாய்க்குலமுடையான் பட்டர், திருக்கச்சி நம்பிகள். இத்தகைய பெருமை பெற்ற பெரியநம்பி திருவடிகள் இனிமையாக இவ்வுலகில் ஊழிக்காலம் வாழ வேண்டுவோமாக.

*வாழித்திருநாம உரை தொடரும்....*

உலகில் சிறந்த உணவுப் பொருளாக பெயர் பெற்றது இஞ்சி. இதனை சமஸ்கிருதத்தில் அர்த்தக என்று கூறப்படுகிறது. ஜிஞ்ஜிபரேசி என்ற தாவர குடும்பத்தைச் சேர்ந்த இதன் அறிவியல் பெயர் ஜிம்ஜிபர் அபிஷானாலிஸ் என்பதாகும். இஞ்சியை ஆயுர்வேதத்தில் மனநோய்களுக்கு பயன்படுத்து கிறார்கள் என்பதைப் பற்றி அறிந்து கொள்வோம்.

ஜீரணக்குழாய் சீராய் பணிபுரிய வேண்டுமெனில் நாள் தோறும் காலை வெறும் வயிற்றில் 100 மி.லி. சுடு தண்ணீரில் 5 மி.லி. அளவு இஞ்சிச்சாறு, 5 மி.லி. எலுமிச்சம்பழ இரசம், ஓிரண்டு ஸ்பூன் சர்க்கரை கலந்து குடித்து வந்தால் ஜீரணக் குழாய் சீராய் பணி புரியும். மேலும் பித்தம், வாந்தி, தலைச் சுற்றுதல் போன்ற வியாதிகள் குறையும். புற்றுநோய் வியாதிக் கும் உபயோகப்படுத்தப்படுகிறது. நவீன மருந்துகளினால் ஏற்படக்கூடிய வாந்தி, பசியின்மை போன்றவை அகலும்.

### மாதவிடாயின்போது ஏற்படக்கூடிய வலிகள் குறைய

200 மி.லி. நீரில் 2–5 கிராம் இடித்த இஞ்சியைப் போட்டு கொதிக்க வைத்து இறக்கி வெதுவெதுப்பான சூட்டில் உள்ள போது வடிகட்டி சர்க்கரையைச் சேர்த்து குடித்தால் வலி குறையும். நான்கு நாட்கள் இது போல் செய்ய வேண்டும்.

### தொண்டை வலி குறைய

நாள்தோறும் இரண்டு வேளை ஒன்று/இரண்டு கிராம் இஞ்சி, ஒரு இலவங்கம் (கிராம்பு), சிட்டிகை உப்பு சேர்த்து மிருதுவாக அரைத்து சாப்பிட வேண்டும். ஆசிரியை, ஆசிரியர்கள், பாடகி பாடகர்கள் போன்றவர்களுக்கு ஏற்படும் தொண்டை வலிக்கு இம்மருந்து சிறப்பாகப் பணிபுரியும்.

### வாயுத்தொல்லை நீங்க

கட்டிப் பெருங்காயத்தை சிறிதளவு எடுத்து நெய்போட்டு நன்கு வறுத்து 25 கிராம் பொடி எடுத்துக் கொள்ள வேண்டும். வறுத்த ஓமப்பொடி 25 கிராம், ஏலக்காய் பொடி 25 கிராம், இஞ்சி இரசம் 50 கிராம் எடுத்துக் கொண்டு இவையனைத்தும் மிருதுவாக அரைத்து வெயிலில் காய வைத்து, பொடி செய்து ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு நாள் தோறும் 2 வேளை. வேளைக்கு 2 கிராம் பொடியை 100 மி.லி. வெது வெதுப்பான நீரில் கலந்து குடித்து வந்தால் வாயுத் தொல்லை, புளியேப்பம் போன்றவை நீங்கும்.

### பலவிதமான காய்ச்சல் குணமாக

நாள்தோறும் 3 வேளை 10 மி.லி. இஞ்சி இரசம், 10 மி.லி. துளசி ரசம், 5 மி.லி. தேன் ஆகியவற்றை கலந்து குடித் தால் மலேரியா, டைபாய்டு, டெங்கு, சிகன்குன்யா போன்ற காய்ச்சல்கள் குறையும்.

### சுவாசக்கோளாறுகள் நீங்க

நாள்தோறும் இரண்டு மூன்று முறை, வேளைக்கு 100 மி.லி. சூடான பாலில் 10 மி.லி. இஞ்சி இரசம், 3–4 சிட்டிகை மிளகுப்பொடி ஆகியவற்றை கலந்து குடித்து வந்தால் சுவாசக்கோளாறுகள் நீங்கும்.

### தோல் நோய்கள் நீங்க

நாள்தோறும் காலை, மாலை 1–2 கிராம் இஞ்சி, வெல்லம் எடுத்துக் கொண்டு மிருதுவாக அரைத்து உட்கொண்டால் சொரி, அரிப்பு, தடிப்புகள் போன்ற தோல் நோய்கள் குறையும். அதுமட்டுமின்றி உள்ளங்கை, கால் பாதங்களில் ஏற்படும் தோல் உரிதல் போன்றவை குறையும்.

### கால் வீக்கம் குறைய

200 கிராம் கடுக்காய் பொடி, 4–5 முறை வடிகட்டிய கோமூத்திரம் கலந்து



திருமலை எழில் மிகு மரங்கள் நிறைந்து பசுமையாய், வெண்ணிற வண்ணத்தில் புண்ணிய தீர்த்தங்களான அருவிகளின் ஓசைகள் நிறைந்து, அரிய வன உயிரினங்க ளின் வாழ்விட மாகத் திகழ் கிறது. அத்த கைய எழில் மிகு நிறைந்த திருமலையைப் பாது காக்கும் பொறுப்பும் நம்மிடம் உள்ளது.

நாம் உபயோகித்த பொருட் களை புனிதமான திருமலையில் ஆங் காங்கே வீசி எறிவதனால் இயற்கை வளமும், நீர் வளமும் மாசடைகின்றது. இதனால் மழைக்காலங்களில் மலைச்சரிவு போன்றவை நிகழ்கின்றன. அடர்ந்த வனப்பகுதியான திருமலையை வாழ்விடமாகக் கொண்ட உயிரினங்களும் அழிந்து விடும் அபாயம் உள்ளது.புனிதமான இந்த சேஷாசல வனப்பகுதியை பாதுகாத்து, ஸ்வாமியை தரித்து நம் சந்ததியினருக்கும் அந்த பெரும் பாக்கியம் அளித்திடுவோம்.




வெயிலில் உலர்த்தி பின் தகுந்தளவு இஞ்சி இரசம் சேர்த்து மறுபடியும் வெயிலில் உலர்த்தி வைத்துக் கொண்டு, நாள்தோறும் 2 வேளை 1 அல்லது 2 கிராம் பொடியை 100 மி.லி. வெதுவெதுப்பான நீரில் கலந்து உட்கொள்ள வேண்டும்.

**முழங்கால் வலி நீங்க**

100 மி.லி. இஞ்சி இரசத்தை 200 மி.லி. எள்ளெண்ணெய் உடன் கலந்து தண்ணீர் இல்லாதபடி மிதமான சூட்டில் சூடு செய்து நுரை கட்டும் வரை கொதிக்க வைத்து, பின்னர் ஆறியபின் அதில் 20 கிராம் கற்பூரத்தை கலந்து மூடி வைக்க வேண்டும். பின்னர் இதனை ஓரிரண்டு முறை முழங்காலில் தடவவேண்டும். அதுமட்டுமின்றி தலைவலி, முதுகுவலி, கழுத்துவலி போன்றவற்றிற்கும் இந்த எண்ணெய் நன்கு பணி புரியும்.

**தலைவலி குறைய**

நாள்தோறும் காலை–மாலை 50 மி.லி. வெதுவெதுப்பான நீரில் 10 மி.லி. இஞ்சி இரசம், அரை டீஸ்பூன் வெல்லப்பொடியை கலந்து குடித்தால் தலைவலி குறையும். 250 கிராம் இஞ்சியை கழுவி,சிறு துண்டுகளாக நறுக்கி பாத்திரத்தில் போட்டு, 25 கிராம் ஸைந்தவல வணப் பொடி, தகுந்தளவு எலுமிச்சைப்பழச்சாறு சேர்த்து வெயிலில் நன்கு காய வைத்து, ஒரு சீசாவில் பத்திரப்படுத்தி, நாள்தோறும் இரு வேளை 1கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் தலை வலி, வாந்தி, தலைசுற்றல் போன்றவை குறையும்.

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390.
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, திருப்பதி.

## திருமலையில் பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை

புண்ணிய திருத்தலமாம் திருமலையின் தூய்மைக்காக ஒவ்வொருவரும் தம் பங்கு முயற்சி எடுத்துக் கொள்ளல் வேண்டும். இதனை கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானமும் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்திர தடை விதித்துள்ளது. எனவே, பக்தர்களும் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும் அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள். துணிப் பைகளையும், பிளாஷ்டிக் அல்லாத குடிநீர் பாட்டில்களையும் பயன்படுத்துங்கள். திருமலையில் தி.தி.தே. வழங்கும் ஜலபிரசாதத்தை உபயோகியுங்கள். திருமலையின் சுற்றுபுறத்தையும், சுகாதாரத்தையும் காப்பதோடு நீர் வளத்தையும் நில வளத்தையும் காப்பதும் நம் கடைமையாகும்.



# ஜனவரி 2023
# ராசி பலன்கள்



– டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் சுபச்செலவுகள் நடக்கும். வீடு, மனை, வாகனம், மின்னனு, மின்சாரப் பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். தாய்–தந்தையரின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். மனைவியால் தனலாபம் உண்டு. குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. சகல துறைகளிலும் வெற்றி உண்டு.

**ரிஷபம்**

பழைய பாக்கிகள் வசூலாகும். நல்ல லாபம் உண்டு. படித்தவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இட மாற்றமும் பதவி உயர்வும் உண்டு. கணவன்–மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். நண்பர்கள், உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். பூர்வ புண்ணிய சொத்துக்கள் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

**மிதுனம்**

ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். தெய்வ தலங்களுக்கு யாத்திரைகள் செய்து நல்ல தரிசனம் கிடைக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். தொழில் விருத்தி காரணமாக இடமாற்றம் உண்டாகும். குடும்பத்தில் இருந்த மருத்துவச் செலவுகள் குறையும். கணவன்–மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். நல்ல திருப்பங்களும் முன்னேற்றங்களும் ஆரம்பமாகும்.

**கடகம்**

மனைவியின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. புதிய முயற்சிகளில் சிந்தித்துச் செயல்படவும். மாணவர்கள் மிகவும் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். செலவினங்கள் அதிகமானாலும் தெய்வ அருளினால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். தாயின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் மிகவும் அக்கறையுடன் செயல்பட வேண்டும்.

**சிம்மம்**

வயிறு உபாதை, அதிக திருஷ்டி ஏற்படும். தொழில் துறையில் கடுமையாக உழைத்து முன்னேறுவார்கள். பண விஷயத்தில் மிகுந்த அக்கறை தேவை. குழந்தைகளால் மன நிம்மதி உண்டு. இளைய சகோதரனுக்கு உடல் நலிவாகும். பெற்றோரின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் போட்டியில் வெற்றி கிடைக்கும். இம்மாதம் இடமாறுதல் தவிர்ப்பது நல்லது. தெய்வ வழிபாட்டினால் நன்மை ஏற்படும்.

**கன்னி**

தந்தையின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. குடும்ப உறுப்பினர்களால் சிறு பிரச்சனை ஏற்பட்டுப் பின் சரியாகும். தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. மனைவியின் ஆலோசனை உங்களுக்குப் பேருதவியாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.. தாராள பணப்புழக்கம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். இம்மாதம் புதிய வேலைவாய்ப்பு அமையும்.

**துலாம்**

மனைவியின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். தாயின் ஆரோக்யம் மேம்படும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றமும் ஆரோக்கியமும் உண்டு. தொழில் துறை அலைச்சல் உண்டு. பூர்வ புண்ணிய சொத்துக்கள் விரைவில் கிடைக்கும். குடியிருக்கும் வீடு மாற வேண்டிய சூழல் உருவாகும். நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

**விருச்சிகம்**

குழந்தைகளின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. பூர்வ புண்ணிய சொத்துகளைப் பற்றி பேசாமல் இருப்பது நல்லது. கர்ப்பவதிகள் பிரயாணம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. தாயின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் வெற்றியை அடைவீர்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவர். தெய்வ பலத்தினால் முன்னேற்றம் கிடைக்கும்.

**தனுசு**

குழந்தைகள் விளையாடும் போது எச்சரிக்கை தேவை. பூர்வ புண்ணிய சொத்துக்களில் பிரச்சனைகள் ஏற்பட்டு பிறகு சரியாகும். நண்பர்கள், உறவினர்கள் உதவிகள் செய்வார்கள். தாய் வீட்டுச் சொந்தங்களின் மூலம் நன்மைகளைப் பெறுவீர்கள். மாதத்தின் பிற்பகுதியில் எதிர்பார்த்த தனலாபம் கிடைக்கும். வீடு, நிலம் வாங்க ஒப்பந்தம் போடுவதை தவிர்ப்பது நல்லது.

**மகரம்**

இம்மாதம் மனப்பாரம் குறையும். குடும்பத்தில் அமைதியான சூழல் உருவாகும். தொழில் துறையில் இருந்த அலைச்சல்கள் குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். குழந்தைகளுக்கு இருந்த ஆரோக்யப் பிரச்சனைகள் தீரும். சகோதர சகோதரிகளுக்கு அதிக நன்மை உண்டு. விளையாட்டுத் துறைகளில் ஈடுபட்டவர்கள் புதிய சாதனைகள் செய்வர்.

**கும்பம்**

இம்மாதம் செலவினங்கள் குறையும். வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த தனலாபம் உண்டு. பெற்றோர் ஆரோக்யத்தில் கவனம் தேவை. தொழில் துறையில் புதிய முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். பிரச்சனைகள் தீர்ந்து நன்மைகள் பெறும் மாதமிது.

**மீனம்**

தொழில் துறையில் வெற்றியைப் பெறுவீர்கள். யாத்திரை செய்வீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சகோதரனின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. பூர்வ புண்ணிய சொத்துக்கள் விரைவில் உங்கள் வசமாகும். திடதேக ஆரோக்யம் உண்டு. புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும். செலவுக்கு ஏற்ற வருமானம் உண்டு. நல்ல யோகத்தைப் பெறும் மாதமிது.

विंशः पाठः

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

பாடம்-20

फलम् = பழம், பழத்தை
तावत्पर्यन्तम् = அதுவரை
एतस्य = இதற்கு, இதனுடைய
एतावत्पर्यन्तम् = இதுவரை
कियत्पर्यन्तम् = எது வரை
खाद् = சாப்பிடுதல், நிகழ்காலம்
तस्य = அவனது, அவனுக்கு, அவனுடைய

प्र. खादति = खादन्ति படர்க்கை म. खादसि = खादथ முன்னிலை उ. खादामि = खादामः தன்மை

## வினாக்கள்

1. तस्य जनकः एतावत्पर्यन्तं कुत्रासीत्?
2. अस्मद्गृहे आसीत्।
3. तत्र किं करोति?
4. तत्र फलं खादति।
5. ते कियत्पर्यन्तं पाकं कुर्वन्ति?
6. एतस्य गृहं कुत्रास्ति?
7. यूयम् इदानीं किं कुरुथ?
8. वयं फलानि खादामः।
9. बालकाः अन्नं खादन्ति।
10. त्वं तस्य गृहे किं खादसि?

1. இந்தப் பழம் யாருடையது?
2. இது என்னுடையது.
3. உன்னுடைய சொம்பில் நீர் இருக்கிறதா?
4. என்னுடைய சொம்பே இங்கு இல்லை.
5. ஆனால் சாதத்தை விரைவாக சாப்பிடுகிறீர்களே ஏன்?
6. எங்கள் வீட்டில் யாருமில்லை.
7. நான் உங்களுக்காக சமையலைச் செய்தேன்.
8. இவர்கள் எதற்கு இங்கு சாதத்தைச் சாப்பிடுகிறார்கள்.
9. அவர்கள் வீட்டில் இல்லையாம்.
10. அதற்காக நான் இங்குச் சாப்பிடுகிறேன்.

## விடைகள்

1. அவனுடைய தந்தை இதுவரை எங்கிருந்தார்?
2. எங்கள் வீட்டில் இருந்தார்.
3. அங்கு என்ன செய்கின்றார்?
4. அங்கு பழத்தைச் சாப்பிடுகின்றார்.
5. அவர்கள் எதுவரை சமையல் செய்வார்கள்?
6. இவனுடைய வீடு எங்கிருக்கிறது?
7. நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்கள்?
8. நாங்கள் பழத்தைச் சாப்பிடுகின்றோம்.
9. சிறுவர்கள் சாதம் சாப்பிடுகின்றார்கள்.
10. நீ அவனுடைய வீட்டில் என்ன சாப்பிடுகின்றாய்?

1. एतत् फलं कस्य?
2. एतत् मम।
3. तव कलशे जलमस्ति वा?
4. मम कलशमेव अत्र नास्ति।
5. तर्हि यूयं किमर्थं त्वरया अन्नं सादथ?
6. अस्माकं गृहे केऽपि न सन्ति।
7. अहं युष्मभ्यं पाकम् अकरवम्।
8. एते किमर्थम् अत्र अन्नं सादन्ति?
9. ते गृहे न सन्ति खलु।
10. तदर्थम् अहम् अत्र खादामि।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

நீதிக்கதை

# பெற்றோரைப் போற்றிடுவோம்!

கர்நாடக மாநிலத்தில் உடுப்பி அருகில் உள்ள பாஜகா என்ற ஊரில் வாயுபுத்திரன் ஹனுமனின் அவதாரமாகப் போற்றப்படும் மத்வாசாரியாரின் இயற்பெயர் வாசுதேவர். ஆயக் கலைகள் ஒவ்வொன்றும் கற்றுத்தேர்ந்தாலும் ஓட்டம், தாவுதல், நீச்சல் போன்றவற்றில் சிறந்தவராகத் திகழ்ந்த வாசுதேவரை "பீமன்" என்று அன்புடன் அழைத்தனர். ஐந்து வயதில் உபநயனம் நடைபெற்ற வாசுதேவர் வேதங்களையும், வேதாந்தங்களையும் கற்று பயின்று தனது 11ஆம் வயதில் விஜயதசமி புண்ணிய தினத்தில் மத்வாசாரியார் என்ற நாமத்துடன் சன்யாசத்தை மேற்கொண்டார். பூர்ண ப்ரஜன்ன என்றும் அழைக்கப்பட்டார்.

மத்வர் பாரத தேசம் முழுவதும் பயணம் மேற்கொண்டு பக்தி மார்க்கத்தை மக்களுக்கு உணர்த்தி, துவைத சித்தாந்தத்தை பரப்பினார். உடுப்பியில் உள்ள மால்பே கடற்கரையோரம் ஒரு சமயம் தியானத்தில் ஆழ்ந்திருந்தார் மத்வர். அச்சமயத்தில் கடலில் ஏற்பட்ட காற்றழுத்தத்தில் சிக்குண்ட கப்பலுக்கு தனது மேல் ஆடையைக் காட்டி வழிகாட்டினார். அந்த கப்பலில் பயணித்த பெரிய வியாபாரி கொடுத்த விலை உயர்ந்த பொருட்களை வேண்டாம் என்று கூறி, தனக்கு கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் உங்கள் கப்பலில் உள்ள கோபி சந்தன கட்டிகளை கொடுங்கள் என்றார். அவர் விலை மதிப்பற்ற இந்த கட்டிகளை கேட்கிறாரே என எண்ணி கொடுத்தார்.

அந்த விலைமதிப்பற்ற கோபி சந்தன கட்டியில் விலைமதிப்பில்லா கிருஷ்ணர் சிலை இருந்தது. அது துவாபர யுகத்தில் ஸ்ரீருக்மிணிக்காக கிருஷ்ணரே தேவச்சிற்பியான விஸ்வகர்மாவிடம் கூறி தயாரித்து, ஸ்ரீருக்மிணி தாயார் தனது திருக்கரங்களால் பூஜித்து வந்த ஸ்ரீகிருஷ்ணர் சிலை ஸ்ரீமத்வரிடம் வந்து சேர்ந்தது. இந்த கிருஷ்ணர் சிலையை உடுப்பியில் பிரதிஷ்டை செய்து எட்டு மடங்களையும் நிறுவி பூஜைகளுக்கு ஏற்பாடு செய்தார். இவ்வாறாக இவருடைய லீலைகளை சொல்லஇயலாது.

சிறு வயதில் ஒருநாள் மத்வருடைய தாய் தந்தையர் தமது கடன் குறித்து பேசிக் கொண்டிருப்பதை கவனித்து, தாய் தந்தைய ருக்கு உதவும் எண்ணத்துடன் தனது வீட்டின் பின்பகுதியில் வளர்ந்துள்ள புளிய மரத்தினருகில் சென்று அங்கு கீழே விழுந்திருந்த புளியங்கொட்டைகளை எடுத்துக் கொண்டு வந்து, அந்த கடன் கொடுத்தவரின் கையில் கொடுத்தார். என்ன அதிசயம்! அந்த புளியங்கொட்டைகள் பொற்காசுகளாக மாறின. சிறு வயதானாலும் பெற்றோரின் கஷ்டங்களை உணர்ந்து தன்னால் இயன்ற உதவியைச் செய்ததை இந்த நிகழ்ச்சியிலிருந்து அறியலாம். இன்றும் நாம் கர்நாடகா மாநிலத்தில் உடுப்பி அருகில் பாஜகா க்ஷேத்திரத்திற்கு சென்றால் ஸ்ரீமத்வாசாரியாரின் இல்லத்தையும் அந்த புளியமரத்தையும் நாம் தரிசிக்கலாம்.





**நீதி : சிறு வயதானாலும் சரி, நாம் நம்மால் இயன்ற உதவிகளை நம்மை பெற்ற தாய் தந்தையருக்கு செய்தல் வேண்டும்.**


திருமதி எஸ். கீதா, சென்னை.

பல்சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### பொருத்துக...

1. தை - அ. திருவள்ளுவர்
2. வைகுண்டம் - ஆ. உழவர் திருநாள்
3. பொங்கல் - இ. சப்த வாகனங்கள்
4. ரத சப்தமி - ஈ. ஏகாதசி விரதம்
5. திருக்குறள் - உ. உத்தராயணம்

1. உ, 2. ஈ, 3. ஆ, 4. இ, 5. அ.



### சுலோகம் அறிவோம்!

*சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே*
*காமரூபிணி*
*வித்யாரம்பம் கரிஷ்யாமி சித்திர்பவது*
*மே சதா*


சரஸ்வதி தேவி! உனக்கு நமஸ்காரங்கள். வரம் தருபவளே! வேண்டியவற்றைத் தருபவளே! கல்வித் தொடக்கத்தை செய்கிறேன். அனைத்தும் அடியேனுக்குச் சித்தி ஆகட்டும்!

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

சூரியனை மேன்மை திருநாளாம் அடைந்திடுவோம் உழவர் பொங்கல் வழிபட்டு அன்று.

உழவர் திருநாளாம் பொங்கல் அன்று சூரியனை வழிபட்டு மேன்மை அடைந்திடுவோம்.

### பாதையைக் கண்டுபிடி



குழந்தைகள் எதிர் காலத்தினை அறிந்திட குழந்தைப் பருவத்திலேயே குழந்தையின் அருகில் புத்தகம், கத்தி, பணம், நகை இன்னும் அவர்களுக்கு விருப்பமான பொருட்களை வைப்பர். குழந்தைக்கு அந்த பொருட்களை அடைய வழிகாட்டிடுங்கள்.

### விடுகதை பகுதி...

1. ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் வரும் மன்னன்; அவர் யார்?
2. காலையில் வந்த விருந்தாளி மாலையில் காணவில்லை; அவர் யார்?
3. ஒளிக்கொடுக்கும் விளக்கல்ல, சூடு கொடுக்கும் தீ அல்ல, பளபளக்கும் தங்கம் அல்ல; அது என்ன?

சூரியன்

# விநாடி விநா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி போட்டி எண்-6

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. பைது அற விளைந்த பெருஞ்செந்நெல் என உழவைப்பாடிய நூல் ..........
2. யாருடைய நியமனப்படி இராமாநுஜர் பெரிய நம்பியைக் காண ஸ்ரீரங்கம் புறப்பட்டார் ..........
3. கோவர்த்தன கிரியை கண்ணன் தூக்கிக் கொண்டிருந்த நாட்கள் எத்தனை ..........
4. தை அமாவாசைக்குப் பின்னர் வரும் ஏழாம் நாள் ..........
5. நமஸ்காரப் பிரியன் எனப் போற்றப்படுபவர் ..........
6. பாண்டவர்கள் சூரியனை வழிபட்டு பெற்ற பாத்திரம் ..........
7. திருமலையில் பாரிவேட்டை உத்ஸவம் நடைபெறும் தமிழ் மாதம் ..........
8. யாதவனை அவமானப்படுத்திய பிசாசு யாரை சரணடைந்தது ..........
9. உலகளந்த பெருமாளுக்கு அபிஷேகம் செய்தவர் ..........
10. வேதத்தில் லக்ஷ்மியைப் போற்றும் பகுதி ..........
11. சூரியனுக்கு மிக அருகில் வலம் வரும் முதல் கிரகம் ..........
12. அகத்தியரின் மருத்துவ ஆய்விற்கு வித்திட்ட முருகன் தலம் ..........
13. மத்துவர் கோபி சந்தன கட்டையில் ஸ்ரீகிருஷ்ணரை பெற்ற கடற்கரை..........
14. திருக்கடித்தானம் தலத்தில் வீற்றிருக்கும் தாயார் ..........
15. அலங்கு செந்நெல் கதிர் என உழவைப் பாடியவர் ..........





### போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.01.2023.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**

# இதில் பொருந்தாதது ஏது?



குறிப்பு : பொங்கல், சரஸ்வதி, சூரியன், ஆண்டாள் இவர்களுக்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.

இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்






1) கைவங்கி
2) சந்திர பில்லை
3) ஜிமிக்கி
4) கூந்தலில் பூக்கள்
5) கைவலையல்
6) ஜடை குஞ்சலம்
7) கால் கொலுசு

சித்திரக் கதை

# அன்னதானப்பிரபு ஆதித்தியன்

கதை மூலம் :டாக்டர்.கே. ரவிச்சந்திரன்
சித்திரம் :திரு. சிவாஜி





தர்மராஜா தன் புரோகிதரான தௌம்யனனிடம்
குருதேவா! ஏன் இந்த விதியின் விளையாட்டு! என் மீதுள்ள அபிமானத்தினால், எவ்வளவு கூறியும் கேட்காமல் எங்களுடன் வரும் மக்களை அரவனைத்து உணவு அளிக்க முடியாதவனாகிறேனே!
இவ்வனத்தில் இத்தனை நபர்களுக்கும் உணவினை எவ்விதம் பெறுவேன். பசியோடு இருப்போருக்கு உணவு அளிக்க முடியாத வாழ்க்கை வீணல்லவா?
வருந்தாதே தர்மராஜா! அனைத்து உயிர்களுக்கும் அன்னதானப்பிரபு அந்த சூரிய பகவானே! நீயும் சூரிய பகவானை வழிபட்டு, அருளைப் பெற்றிடு. இம்மக்களுக்கு உணவளிக்கும் வழியினைப் பெறுவாய்.
அருணாய! சரண்யாய! கருணாரச சிந்தவே! அசமான பலாய ஆர்த ரக்ஷகாய நமோ நம:
தர்மராஜா! இது அக்ஷய பாத்திரம். இதனை பூஜித்து, வணங்கி வந்தால் எவ்வளவு நபருக்கு வேண்டுமானாலும் அன்னத்தை அளிக்க வல்லது.
பெறற்கரிய பேறு பெற்றேன் ஸ்வாமி!
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

04-12-2022 அன்று திருவேங்கடமுடையானை தரிசிக்க திருமலைக்கு வருகை புரிந்த மேதகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களை வரவேற்று, ஸ்வாமி தரிசனத்திற்குப் பின்னர் பிரசாதங்களை வழங்கிய தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள். உடன் ஆ.மா. துணைமுதல்வர்கள், மத்திய, மாநில அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்













18-11-2022 அன்று தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாக அரங்கில் நடைபெற்ற கார்த்திகை தீபோத்ஸவத் திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். தம்பதியினர், திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர்கள் திரு.வி. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். தம்பதியினர், திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ்.(எச்&இ) அவர்கள்.

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-12-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

